செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௯	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, புரட்டாசி அக்டோபர், 1954.	பரல் ௨

ஓம்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் மறைவு

பிறப்பு

புலமை நிரம்புதற்குரிய புண்ணியர் புகழ்மிக்க தக்க குடும்பத்துத் தோன்றுதல் இயல்பு. அம்முறைப்படி நம் கவிமணி அவர்களும் இருபாற்புலமையும் ஒருங்கமைந்த விழுமிய வேளாண் குலத்து அருளால் தோன்றினர். இத்தகைய நற்குடும்பம் வாழ்ந்தவூர் புத்தேரி ஆகும். இவ்வூர் என்றும் பொன்றாச் செந்தமிழ்நாடாம் நாஞ்சில்நாட்டு நாகர்கோவிற்கு அண்மையில் உள்ளது. புற்றேரி என்னும் சொல் புத்தேரி என மருவிற்றென்ப. புதுமை ஏரி புத்தேரி என வழங்குவதாயிற்று என்பதும் பொருந்தும்.

அவ்வூரில் சான்றாண்மை மிக்க சிவதாணுப் பிள்ளை அவர்கட்கும், அவர்தம் கற்பிற்சிறந்த பொற்புறு மனைவியார் ஆதி இலட்சுமி அம்மையார்க்கும் அவ்விருவர் பெருந்தவமும் ஒருங்கு கூடி ஓர் உருவாய் அருளால் நம் கவிமணி அவர்கள் தோன்றினர். இவர்தம் பிறப்புநலமே பிற்காலச் சிறப்புநலத்தின் அறிகுறியாய் அமைந்திருந்தது. ஒவ்வொருவரும் மனையறத்தில் இன்பம் உறும் மகப் பெறுதல் தாய் மொழியாம் செந்தமிழும் சால்நெறியாம் சைவமும் மிகப் பெருகி எல்லாவுலகமும் இணையிலா இன்பெய்தி வாழ்வதற்கேயாம். இவர் பிறந்த நாள் தாது ஆண்டு (1876) ஆடித்திங்கள் பதினான்காம் நாளாகும்.

ஈன்றோர் மாண்பு

தந்தையார் சிவதாணுப் பிள்ளையவர்கள் செந்தமிழ்ப் புலமையும், சிவனெறிப்பற்றும், ஆங்கில அறிவும் பாங்குறக் கொண்டவர். அழகியபாண்டியபுரம் உப்புப் பண்டகசாலையில் அலுவல் பார்த்து வந்தனர். அவ் அலுவலின்கண் உண்மையும், ஊக்கமும், ஒல்லும் வாயெல்லாம் ஓவா உழைப்பும், நடுநிலையும் பூண்டு நல்லார் மதிக்க ஒழுகினர். அவர்தம் மனைவியாரும் பெயருக்கு ஏற்பச் சீரிய திருமகளாய் விருந்து பேணல் முதலியவற்றால் மனையறம் பெருக்கி மாண்புடன் வாழ்ந்தனர். இவ் அம்மையார் நாகபட்டினம் வேளாண் விழுத்திணைப் பிறந்தவர். "வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிரு"ப்பவராவர் என்பது உலகறிந்தது ஒன்று. வள்ளன்மை பிறர்க்கென வாழும் உள்ளம் உடைமை. இவ் அம்மையார் சிவநேயமும், தமிழார்வமும், தவஒழுக்கமும், அடியார்ப்பற்றும் முடிமணியாகக் கொண்டு ஒழுகினர்.

கல்வி

நம் கவிமணியார் மிகவும் செல்வமாக வளர்ந்து வந்தனர். உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் நல்லநாள் கொண்டு எழுத்தறிவிக்கப்பெற்றனர். எழுத்தறிவித்தல் ஏடு தொடங்குதல். கல்வியின் பண்பைச் சேக்கிழார் அடிகள் உள்ளவாறுணர்த்தும் அருண்மொழி வருமாறு :

" மருள்நீக்கி யார்சென்னி மயிர் நீக்கும் மணவினையும்
தெருள்நீர்ப்பல் மாந்தரெலாம் மகிழ்சிறப்பச் செய்ததற்பின்
பொருள்நீத்தம் கொளவீசிப் புலன்கொளுவ மனமுகிழ்த்த
சுருள் நீக்கி மலர்விக்கும் கலைபயிலத் தொடங்குவித்தார்."

—கஉ. திருநாவுக்கரசர் புராணம், உ௦.

கலைபயில் தொடக்கத்தே முன்னைத் தொடர்பாலும், அன்னை அத்தர் அரும்பண்பாலும் செந்தமிழ்மாட்டும், செய்யுட்டிறத்தும் இனித்ததோர் தனிப்பற்று உண்டாயது. இஃது,

" ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து." —திருக்குறள், ௩௯௮.

என்பதால் வலியுறும்.

நல்ல பாட்டுக்கள் என்றால் மிகவும் கருத்தூன்றிக் கேட்பர். பெரிதும் உவப்பர். அஞ்ஞான்று தமிழ்ப் பெருமக்களும், செல்வர்களும் தாய்மொழிக்கண் வாய்மொழி அகலாப் பெரும் புலவர்களை மிகவும் போற்றிப் புகழ்ந்து ஓம்பிவந்த பொற்காலம். அதனால் நல்லிசைப் புலவர்கள் நன்மதிப்பு நாடெங்கும் இயல்

பாகவே பரவியிருந்தது. அம்மதிப்பு நம் கவிமணியவர்கள்பாலும் இயல்பாகவே அமைந்திருந்தது. புலவர்கள் பொற்கிழி, பொன்னுடை, போனகம், நன்னிலம், மாளிகை பலவும் பெற்று வாழ்ந்திருந்தனர். பாண்டி நாட்டுப் புலவர் ஒருவர் நாஞ்சில் நாடு நண்ணினர். தம் புலமையால் பரிசு பெற எண்ணினர். புலவர்ப் போற்றும் புரவலராம் நம் கவிமணியின் தந்தையார் சிவதாணுப் பிள்ளையவர்கள் அப் புலவர் பெருமானைப் பெரிதும் நல்வரவேற்றுத் தம் மனையகத்து விருந்தினராய்த் தங்க வேண்டுவன நல்கிப் போற்றி வந்தனர். புலவர் பெருமகனார் சிவதாணுப் பிள்ளையவர்களை மெய்யாகப் புகழ்ந்து பொய்யாப் பாமாலை சூட்டினர். அப்பாட்டினைத் தந்தையார் அருமைமகனார்க்குப் படித்துக் காட்டினர். அதனைக் கேட்ட நம் கவிமணி உடனே தாமும் ஓர் அரும்பெறற் பாட்டியாத்துத் தந்தையார்க்குச் சூட்டினர். அச் செயல் மிகவும் இளமைப் பருவத்து நிகழ்ந்தது. அதனால், ஒரு சிலவே நம் கவிமணியின் நினைவில் இன்றுகாறும் நீங்காதிருந்தன :

> " நவகோடி நாராயணன்...உப்புப் பண்டகசாலைக்குச்
> சிவதாணுப் பிள்ளைக்கனு கூலன், வீரபர நங்கை தேவிதானே..."

பாட்டனார் மாண்பு

நம் கவிமணியாரின் பாட்டனார் தாமரைக்குளம் என்ற ஊரில் இருந்தனர். நிரம்பிய தமிழ்ப் புலமை வாய்ந்தவர். தம் பெயரனாராம் நம் கவிமணியைப் பெரிதும் நேசித்து வந்தனர். பல நாளும் தம்முடனே உறையும்படி செய்தனர். வேண்டுவ நல்கி விழைவுடன் போற்றி வந்தனர். தம் அருகிலேயே துயிலுமாறு பயிற்றி வந்தனர். பாட்டனார் துயிலுறுது பாட்டுப் பாடும் செயலில் எப்பொழுதும் பாடிக்கொண்டே யிருப்பர். அப்பாட்டுக்கள் அனைத்தும் அவர் புதுவதாகப் புனையும் பொற் பாட்டுக்களேயாம். நம் கவிமணி தம் அருமைப் பாட்டனாரைப் பார்த்து "பாட்டையா ஏன் என் தூக்கத்தையும் கெடுத்து விடாது முணுமுணுத்துக்கொண்டிருக்கிறீர்கள்" என்று அடுத்தடுத்து வினவுவர். அவரும் அன்புடன் புன்னகை பூத்த முகத்தினராய், "அப்பா இது முணுமுணுப்பல்ல புத்தம் புதிய பாட்டுக்கள் தோன்றும்போது உண்டாம் மெல்லொலி" என்று விடையிறுப்பர். இதைக் கேட்டதும் நம் கவிமணிக்குத் தாமும் அவ்வாறு பாடவேண்டும் என்னும் புத்துணர்ச்சி வலுப்பெற்றது. பாட்டனார் பாடி முடித்த பெருநூல் "காரியந்தாதி" என்னும் அருநூலாகும். இந்நிகழ்ச்சி நம் கவிமணி பிற்காலப் புலவர் மணியாவதற்கோர் எழுச்சித்துணையாய் இருந்தது. இதிலிருந்து

சூழ்வும் துணையும் ஒருவர் வாழ்வின் அடிப்படைக் காவலாகும் லன்பது நன்கு துணியப்படும்.

ஆங்கிலப் படிப்பு

நம் கவிமணியார்க்குத் தந்தையாரும் பாட்டனாரும் முறையே பள்ளிப்படிப்புடன் புலமைப்படிப்பின் வேட்கையும், புலமைப் படிப்பும் நாளும் ஓங்கப் போதித்துவருவாராயினர். அம்மட்டோ! அஞ்ஞான்று தேரூரைச் சார்ந்த வாணத்திட்டில் செந்தமிழும், சித்தாந்த சைவமும் தேயமெல்லாம் ஓங்க ஒல்லும் வகை ஓவாது உழைத்துப் பெரும்புகழ்கொண்டு திகழும் திருவாவடுதுறைத் திருமடம் ஒன்று இன்றும் உளது. அஞ் ஞான்று அத் திருமடத்து வீற்றிருந்து ஆட்சிபுரிந்த அடிகள் சிவத்திரு சாந்தலிங்கத் தம்பிரானவர். அவ்வடிகளார் தென் மொழி வடமொழி முதலிய பன்மொழி வல்லுநர். சித்தாந்த மும் திருமுறையும் சிறக்கவுணர்ந்த செம்மலார். அழுக்கிலாத் துறவடக்கம் அறிவொடு அருச்சித்தல் ஆதி வழுக்கிலாத் தவ ஒழுக்கமுடையார். அவ்வடிகள்பால் நம் கவிமணி தமிழ்ப் புலமைப்படிப்பு முற்றுக ஓதியுணர்ந்தனர்.

நம் கவிமணியவர்கள் ஆங்கிலப்பள்ளியில் சேர்ந்து மெட்றி குலேசன் தேர்வில் மிக எளிமையாகத் தேறினர். பின் கல்லூரி யில் இளம்புலமை (F. A.) வகுப்பிற் சேர்ந்து கற்றுவந்தார். ஆங்கிலக்கல்வி கற்குங்காலத்தும் ஓங்கிய சிவநெறிப்பற்றும், பாங்குறு திருநீற்றுப்பொலிவும், திருமுறை சித்தாந்தம் ஓதலும் முதலாய தவஒழுக்கமுடையராய்த் திகழ்ந்தனர். ஆசிரியர் மாட்டு அன்பும் பணிவும் இன்சொல்லும் அணியெனப் பூண் டொழுகினர். உடன்பயில் மாணவர்பால் கனிவும், ஆர்வமும், கட்டுரை வன்மையும், உளமமர் நண்பும், ஒற்றுமைப் பண்பும் உளராய் விளங்கினர். திருமண நிகழ்ச்சி காரணமாக ஆங்கிலப் படிப்பு அவ்வளவில் அமைந்தது.

தமிழ்க்கவி யாற்றல்

தூய தமிழ்ப்புலமை வாய்ந்தார் பலரும் சிவபெருமான் திருவருளும், மெய்யடியார் தலையளியும், சான்றோரிணக்கமும் கைவரப்பெற்றவராய்த் திகழ்வது கண்கூடு. அதனால் அவர்தம் வாய்மொழிப் பாக்கள் இயல்பாகவே ஆணை நிரம்பிய மறை மொழியாகின்றன. இவ்வுண்மை :

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப." —தொல். பொ. சக0.

என்னும் தொல்காப்பியச் செழுமறையாலும்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." —திருக்குறள், உஅ.

என்னும் திருக்குறள் பொதுமறையாலும் நன்கு பெறப்படும்.

இம்முறையில் நம் கவிமணியவர்கள் அடிகளார்பால் தமிழ்ப் புலமைப்படிப்புப் படிக்குங்கால் ஆசிரிய அடிகளாரின் ஆணைவழிநின்று ஒரு மறைக்கவி பாடினர். அம் மறையாற் றலால் பாடப்பட்டோன் உடன் மாண்டனன். அடிகளாரும் கவிமணியவர்களின் நாவன்மையை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினர். அக்கவியின் சில தொடரே கவிமணி அவர்கள் நினைவி லிருந்து வெளிப்போந்தன. அவை வருமாறு:

"நெஞ்செரிய வயிறேங்க நினைக்கும்போது
நித்திரைகண் விட்டொழிய சாபோற்றிக் கண்ணுநீயே"

என்பன. இதற்குரிய காரணம் வருமாறு:

அடிகளார் மதுரையிலுள்ள சா. போற்றிக்கண்ணு என்பவ னிடம் சிவமணி வாங்கியனுப்பப் பணங்கொடுத்தனர். அவன் வல்லார் முதல் எல்லாரையும் ஏமாற்றும வல்லான். நல்லார் போல் நடிக்கும் நயவஞ்சகப் பொல்லான். அத்தகைத் தீயோன் அடிகளாரையும் ஏமாற்றிவிட்டனன். அடிகளார்க்குச் சிறிது வருத்தம் ஏறபட்டது. அவ்வருத்தம் வெகுளிக்கு அடிப்படை யாயது.

"குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது." —திருக்குறள், உகூ.

என்பது செந்தமிழ்ப் பொதுமறையல்லவா? அதுபோல் அடிகளார் வெகுளியும் நம் கவிமணியவர்களைத் தூண்டி மேற்கூறிய மறைக்கவியாகப் போந்தது அக்கவி பாடத் தொடங்கிய போதே குறித்த சா. போற்றிக்கண்ணு நமனுலகெய்தினன். யாவர்களும் கவிமணியின் கவியாற்றலை வியந்தனர்.

சிவதீக்கை

ஆருயிர் ஈடேறக் கைக்கொள்ளவேண்டிய அகக்கல்வி திருமுறை சித்தாந்த முதலிய சிவநூற் கல்வியேயாம். அதற்கு வேண்டும் அடிப்படை உரிமையும், ஒழுக்கமும், ஆற்றலும், பயிற்சியும் அளிப்பது சிவதீக்கையேயாம். அத்தகைய சிவதீக் கையினைத் திருநெல்வேலி மறைத்திரு. உமையொருபாகக் குருக்களிடம் பெற்றுக்கொண்டனர். சித்தாந்த சைவச்சீலராய் ஒழுகினர்.

நம் கவிமணியவர்கள் சிவதீக்கை பெற்றமையினை மகிழ்ந்து கூறும் சொல்லும் பொருளும், எளிமையும் இனிமையும், திட்பமும் நுட்பமும் செறிந்த வெண்பா வருமாறு :

வேறும் ஒருதுணையான் வேண்டுவனோ வேணுவனம்
தேறும்உமை யோர்பாகத் தேசிகனே—கூறுமெனக்
கெய்யாப் பிறவி இருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது.

குடும்ப வாழ்க்கை

கற்பும், பொற்பும், கவினும் நிறைந்த உமையம்மை என்ற நங்கையினைக் கடவுளருளால் திருமணம் செய்துகொண்டு அறவோர்க் களித்தலும், அந்தணரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும், நம்பர் திருவடியார்கட்கு வேண்டுவ நல்கலும், சுற்றம் ஓம்பலும், கற்றவர்ப் போற்றலும், கற்புநிறை காத்தலும், மக்கட் பேணலும், சிவவழிபாடும், தவநெறி ஒழுக்கம் கைவிடாதியற்றலும் முதலிய வற்றால் மாண்டகுணஞ்சேர் மங்கல மனைவியுடன் நானிலம்புகழ மேனிலம் வாழ்த்த, 'காலுணவாகச் சுடரொடு கொட்கும் முனிவரும் மருள' மனையறம் பேணிவந்தனர். இவர்தம் மனையறச் சிறப்பு பண்டைச் செந்தமிழ்ச் சான்றோரின் சீரிய வாழ்க்கையினை நினைவூட்டும் நீர்மையது. அவ்வாழ்க்கை பலவற்றுள்ளும் இரண்டொன்றை ஈண்டுக்காட்டுதும் :

"கந்துமுனிந் துயிர்க்கும் யானையொடு பணைமுனிந்து
காலியற் புரவி ஆலும் ஆங்கண்
மணன்மலி முற்றம் புக்க சான்றோர்
உண்ணா ராயினும் தன்னொடு சூளுற்று
௫ உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்." —புறம், ௧௭௮.

என்னும் இச் செய்யுட்கியைய நம் கவிமணியவர்களும் அம்மையாரும் அகனமர்ந்த அன்பினராய் விருந்து பேணுவதுடன் விருந்தினரைக் கனிந்து நோக்கி உள்ளங்குழைந்து இனிய குரலில் "சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள், முழுவதும் சாப்பிடுங்கள்; அப்படியானால்தான் எங்கள் மனம் நிறைவுறும்; மகிழ்வு எய்தும்" என வற்புறுத்தி உண்பிப்பர்.

ஆசிரியத் தொண்டு

இளம்புலமைப் (F. A.) பட்டம் எய்தாமுன்பே போதனாமுறைக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்றனர். நடுநிலைப் பள்ளி (Secondary Grade) ஆசிரியராகத் தேர்ச்சிபெற்றனர்.

கோட்டாற்றில் முதன்முதல் ஆசிரியத் தொண்டியற்றினர். பின் நாகர்கோவிலிலும் அப்பணியே புரிந்தனர். அக்காலங்களில் பாடிய இன்னிசைப் பாக்கள் பல. கற்பிக்குங் காலங்களில் மாணவ மாணவிகள் மிகவும் எழுச்சியுடனும் கிளர்ச்சியுடனும் பயின்றனர். உள்ளம் உவந்து, கருத்தூன்றி, மறவா நினைவோடு கற்றனர். அவற்றிற்கெல்லாம் காரணம் நம் கவிமணியவர்களின் கற்பிக்கும் பேராற்றலேயாம்.

இப் பேராற்றலைக் கண்டும் கேட்டும் மிக வியந்த திருவிதாங்கூர் அரசினர் இவரை "மகாராசா பெண்கள் கலாசாலை"த் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தினர். இவர்களும் அத்தொண்டினையே தம் வாழ்நாளெல்லாம் வளமொடு இயற்றினர். முதற்கண் ஆசிரியர் வேலையில் அமர்ந்தது சற்றேறக்குறைய 1895-ஆம் ஆண்டாகலாம். அக்காலத்து இவர்கட்கு அகவை பத்தொன்பது. வேலையினின்று விடுபெற்றது 1931-ஆம் ஆண்டு என்ப.

உரனுடை உள்ளம்

கல்லூரிக் கண்காணிப்பு மேலாளர் ஒருகால் கல்லூரியை ஆய்ந்து இவர்தம் தொண்டுகளை வியந்தனர். இவரை அரசினர் ஆண்கள் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்த விழைந்தனர். அதற்குப் பெண்கள் கல்லூரி முதல்வி இணங்கவில்லை. பின்பு இவர்தம் அஞ்சாநெஞ்சத்து உரனுடை உள்ளத்தை அளக்க ஓர் நகைச்சுவை நிகழ்ச்சி நிகழ்ந்தது. அஃதாவது, நம் கவிமணி அவர்களைப் பார்த்துக் கண்காணிப்பு முதன்மையர் "தாங்கள் பெண்கள் கல்லூரியில் அலுவல் பார்ப்பது பொருந்துமா? மேலும் தாங்கள் ஆண்கள் கல்லூரியில் அலுவல் பார்க்கலாமா? அதற்கோர் நற்சான்று பெற்றுவருதல் வேண்டும் என மொழிந்தனர். நம் கவிமணியவர்கள் தடை ஏதும் மொழியாது பெண்கள் கல்லூரிக்குப் பெண்களே அமைவுடையர் எனப் பகர்ந்தனர். சரேலெனச் சென்று அலுவலொழிவு விண்ணப்பம் (Resignation letter) எழுதிவந்து நல்கினர். இங்ஙனம் தான் நிகழுமென்று கல்லூரி முதல்வியார் முன்னரே அறிவித்துள்ளனர். பின்னர் அவரைக் கண்காணிப்பு முதன்மையர் வியந்து பாராட்டி இங்ஙனம் நிகழ்ந்தது தங்கள் உள ஆய்வின் பொருட்டேயாம். தாங்கள் எவ்வகைத் தடையுமின்றி என்றும் கல்லூரி அலுவலைப் பார்த்துவரலாம் என முகமலர்ந்து அகனுற மொழிந்தனர். இது தொன்மைத் தமிழக மறமாண்பை நினைவூட்டுவதாகும். அது, "வலியரென வழிமொழியலன், மெலியரென மீக்கூறலன்" என்பதேயாம்.

கொலை மறுத்தல்

தேரூரில் நல்லமாடன் கோவில் ஒன்று உண்டு. அதற்குத் திருவிழாக் கொண்டாடுங்காலத்து ஆடு கோழிகளைப் பலியிடுவது அவ் வழிபாட்டினரின் அடாச் செயலாகும். நம் கவிமணியவர்கள் தம் இளமைக்காலத்தே பள்ளித் தோழருடன் இச்சிறு தெய்வ வழிபாட்டைக் காணச்சென்றனர். அறியாமையையே அறிவெனத் திரியக்கொண்டு கல்மனத்தராய்ச் சிற்றுயிர்க்கிரங்காது நற்றிறம்படராச் சுற்றத்துடன் அமைதியே வடிவாய் அகமுறப் பழகிய ஆடு கோழிகளை அவை கதறக்கதற வெட்டிப் பலியிடுவதும, குருதிப்பெருக்காறு பலிபீடத்தினின்று வழிந்தோடுவதையும் அச் சிற்றுயிர்கள் துள்ளித் துடிப்பதைக் கண்டு மகிழ்வதையும் பார்த்து மனம் நடுங்கினர். கண்ணீர் பெருக்கினர். நண்பர்கள் வேண்டுகோளின்படி பாடினர். நினைவுள்ள பகுதி வருமாறு :

நாடியறம் தேடியிடும் நற்றேரூர் தன்னிலமர்
 நல்லமாட னென்றும் மறவ னென்றும்
கோடிபழி செய்தபெருங் கொலைஞர் வேதம்
 கூறிய தெனவே தெளிந்து கொண்டு
ஆடினர் ஆடறுத்தார் அள்ளி யுண்டார்
 ஐயையோ இக்கொடுமை அறிகி லேனே.

இவ்விளம் பருவப்பாட்டு, தாம் பாடிய ஆசியசோதி (The Light of Asia) என்னும் மொழிபெயர்ப்பில் வருமாறு வளர்ச்சியுருப்பெற்றிருப்பது காண்க :

காட்டுப் புலியின் கொடுமைக் கஞ்சி—உங்கள் .
 கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ—அந்த
 நான்மறை போற்றிய நீதிஐயா
மண்ணில் வளர்ந்திடும் புல்லை யுண்ணும்—வான
 மாரி பொழிந்திடும் நீரை யுண்ணும்
எண்ணி நீர்செய்யும் உதவி என்னும்—இதை
 ஏனோ உணர்ந்திலீர் மானிடரே.

இக்கொடுமை விலக்கு நம் செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறளின்கண் வருமாறு வலியுறுத்தப் பெற்றுள்ளது காண்க :

“நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
 கொன்றாகும் ஆக்கம் கடை.” —திருக்குறள், கூஉஅ.

ஆராய்ச்சி வன்மை

நம் கவிமணியவர்கள் வரலாற்று நுட்பம் உணர்ந்த வல்லுந ராய் விளங்கினர். கல்வெட்டு ஆராய்ச்சியில் தலைசிறந்து தோன்றினர். அவர்தம் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அவ்வப் போது ஆங்கிலச் செய்தித்தாள்களில் வெளிவந்துள்ளன. கவிமணி அவர்கள்பால் கடவுட்பற்றும் பெரியார் வணக்கமும் நீங்காதமைந்துள்ளன. எனினும், அயற்புல மாக்கள் சேர்க் கையால் இடையிடையே புகுந்து இன்னலுறுத்தும் பொருந்தாக் கொள்கைகளை வன்மையாகக் கண்டிப்பர். அதனால் பொது மக்களிடையே எழுந்த மூடக் கொள்கைகளுக்கு மிகவும் பரிவர். அக்கொள்கைகளை அறவே அகற்ற எல்லா முயற்சியும் எடுப் பதில் எஞ்ஞான்றும் பின்னடையார்.

நாகர்கோவில் "நகரக் கழக (Municipality) த்துக்குத் தென்பால் ஓர் அருவருப்பான இடமிருந்தது. அவ்விடம் தீ நாற்ற மிக்குடையது. நற்பண்புடையார் எவரும் ஆண்டுச் செல்ல ஒருப்படார். அந்த இடத்தில் ஒரு நடுகல் இருந்தது. அக்கல்லினைப் பொதுமக்கள் இசக்கியம்மை என்று நம்பினர். அதனால் மிகவும் அஞ்சி வழிபட்டனர். கீழ்களதாசாரம் அச்சமே அன்றோ? அக் கல்லினுக்கு எண்ணெய் நீவி, நீராட்டிப், பூச்சூட்டிப், பொங்கலும் படைப்பும் படைத்து, புகை ஒளி காட்டி நெறியல்லா நெறியால் மயங்கி அருச்சிக்கவும் செய்தனர்.

இந் நடுகல் தன்மையைப்பற்றிப் புலவர் உமைதாணுப் பிள்ளை அவர்கள் நம் கவிமணி அவர்களிடம் கூறினார்கள். கவிமணியவர்கள் உடனே சென்று தீநாற்றத்தையும் பொறுத் துக்கொண்டு ஆராயத் துவங்கினர். நடுகல்லிற் பன்னெடுநாள் பதிந்துள்ள அழுக்கை அகற்றினர். வழிச்செல்வார் கண்டு நடுங்கினர். புலவர் பெருமானையும் அச்சுறுத்தினர். மெய் யுணர்வினர் நமனையும் அஞ்சா நலம் படைத்தவரன்றோ? நம் கவிமணியவர்கள் ஒருசிறிதும் நடுங்காது நடுங்குவார் நடுக் கத்தையும் அகற்றினர். அஃதோர் சோழமன்னன் கல்வெட் டெனக் கண்டு களிகூர்ந்தனர். படி எடுத்து வெளிப்படுத்தினர். மேலும் இவர்தம் ஆராய்ச்சித் திறனுக்கு, "காந்தளூர்ச்சாலை" என்னும் இவர் ஆக்கிய ஆராய்ச்சி ஆங்கில நூலே போதிய சான்றாகும்.

கவிமலர்

நம் கவிமணியவர்கள் அவ்வப்போதியற்றிய அரும்பெரும் கவிமலர்களை மணமோர்ந்து தேன் நுகரும் வண்டுகளாகிய

மாணவர்கள், பெருமக்கள் யாவரும் நுகருமாறு பல்வேறு செய்தித்தாள்கள்வழி மலர்வித்தனர். அவற்றுள் சில வரு மாறு: குமரன், கானவித்தியா, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், லட்சுமி, தமிழ்நேசன் முதலியன. இச் செய் யுட்களெல்லாம் ஆற்றொழுக்கும், இன்னோசையும், எளிமையும், தெளிவும், சொற் சுருக்கமும், புது மலர்ச்சியும், கவர்ச்சியும், கிளர்ச்சியும், எழுச்சியும் பிறவும் செறிந்திருந்தன. எல்லாரும் மிகவும் உவப்பாய் வரவேற்றனர்; பள்ளிகளிலும், கல்லூரிகளி லும் ஆசிரியரும் மாணவரும் சிறப்பாக அன்புடன் வரவேற் றனர். அதனால் பள்ளிப் பாடங்கள் எல்லாவற்றிலும் இடம் பெற்று மிளிர்வவாயின அப்பாடல்கள். இப்பாடல்கள் அனைத் தும் "மலரும் மாலையும்" என்னும் பெயருடன் ஓர் அழகிய நூலாக வெளிவந்து அனைவர்களாலும் போற்றிப் புகழ்ந்து கொண்டாடப்பெற்று நிலவுகின்றன.

தீமை ஒழிப்பு

திருவிதாங்கூரில் மருமக்கள் தாயமுறை என்றொரு பொருந்தா முறை மேற்கொள்ளப்பட்டு மக்களுக்குப் பேரின் னல் விளைப்பதாயிற்று. அஃதென்னையெனின்? ஒருவனது மனை நிலம் செல்வம் முதலிய உடைமைகளின் உரிமை அவன் தவ மிருந்துபெற்ற மக்களைச் சார்வதில்லை. அவன்தன் கூடப்பிறந்த பெண்களின் மக்களாகிய மருமக்களையே சார்வதாகும் என்பதே. இதனால் பெற்ற பிள்ளைகள் ஏதுமிலா வறிஞராய் வறுமையி லாழ்ந்து நீங்காத் துயருறவும், மற்ற மக்கள் பெருஞ்செல்வராய் வாழ்ந்து இன்புறவும் நேர்ந்தன. இது கண்ட பெருஞ்செல் வர்கள் பொருள் ஒரு சிறிதும் மிச்சம் வையாது செலவுசெய்யும் வழிவகைகளை நாடினர். அவ்வழிகள் நாட்டிற்குந் தமக்கும் நலம் பயப்பனவாக இருக்கவேண்டுமே என்ற எண்ணம் சிறிதும் கொண்டிலர். நன்மைக்கு மாறாகப் புன்மையே பயக்கும் பல பெண்களை முறையின்றி மணந்து நிறையிழந்து பொருளையும் பொழுதையும் போக்கிக் களிப்பாராயினர்.

இக் கொடுமையினை அறவே ஒழிக்க முன்வந்தனர் நம் கவிமணியவர்கள். புனைபெயரால் "நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியம்" என்னும் நகைச்சுவை பயக்கும் அரியதோர் நூலை யாத்து வெளிப்படுத்தினர். அந்நூல் அகவற்பாவால் ஆயது. இந்நூலால் பலரும் உணர்ச்சிபெற்றுக் கிளர்ச்சியுடன் வேண்டுவ புரிந்தனர். இதன்கண் வரும் பஞ்சகலியாணிப் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு மிக்க சுவை பயப்பதாகும்.

பாங்கற் கூட்டம்

தேரூரில் நம் கவிமணியவர்களின் நண்பர் ஒருவர் இருந்தார். அவருக்கு இளமையிலேயே திருமணம் ஆகிவிட்டது. அப்பெண் பலநாளாகியும் முதற் பூப்பு எய்தவில்லை. பொறுத்துப் பொறுத்து ஆற்றாமை மிக்குற்ற மணமகன் வேற்றூர்புக்குத் தோற்றுத்திருந்தனன். சின்னாட் கழிய அம் மணமகளும் பூப்பு எய்துவாளாயினள். அதனை அறிந்த நம் கவிமணியவர்கள் தம் நண்பருக்குத் திருமுகம் போக்கி வரவழைத்துக் களிமகிழ் சுற்றம் போற்ற வாழுமாறு உடனுறை வாழ்க்கைக்கு உற்றுழி உதவி வாழ்வித்தனர். அத் திருமுகம் வருமாறு :

மந்தாரை மலர்ந்திருக்க மதுவுண்ணும் வண்டெங்கே
  மாமுல்லைக் கொடிபடர வளருங்கொள் கொம்பெங்கே
சிந்தாத மணியிருக்க ஒளியெங்கே சென்றதெனத்
  தேரூரிற் பலர்கூடித் தெரிந்துகொளக் கேட்டதற்கு
நந்தாத பரஞான அமுதுண்டு தெவிட்டெறியும்
  நற்பரமா னந்தவருள் பெறச்சென்ற நண்பாநீ
வந்தாலே மறுமொழியும் வகுப்பமெனச் சோதிடநூல்
  வல்லாரும் கூறுகின்றார் வகையேதும் அறியேனே.

இப்பாட்டு மிக்க பொருட் செறிவுடையதாய்ப் பிரிந்து சென்ற காதலன் உள்ளத்தைக் கனிவித்து மீண்டுவரச் செய்வதாய், பிரிவின் காரணமும், மீண்டுவந்து கூடிவாழவேண்டியதன் இன்றியமையாமையையும், வாழ்க்கையின் பெறுபேற்றையும் 'மலர் கொடி மணி' முதலிய உவமைகளானும், உருவகத்தானும் விளங்கக் கூறுகின்றது. சிறப்பாக இப்பாட்டு வையத்து வாழ்வாங்கு வாழும் அனைவர்கட்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாகும்.

பட்டம் பரிசு முதல

"சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தார்" 1940-ஆம் ஆண்டில் சென்னையில் நிகழ்த்திய ஆண்டு விழாவின்போது, நம் கவிமணியவர்களைப் பலபடப் பாராட்டி ஆங்குக் குழுமிய பெரும் பேரவைமுன் "கவிமணி" என்னும் பட்டத்தைக் கண்ணுக்கும் காதுக்கும் முறையே எண்ணவும் கேட்கவும் நீங்கா இன்பம் பயந்து என்றும் நின்று ஓங்கி நிலவுமாறு உள்ள உவகையுடன் ஒருங்களித்தனர்.

1950-ஆம் ஆண்டில் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் பல மெய்யன்பர்கள் ஒருங்கு குழீஇ நம் கவிமணி அவர்கள் வாழும் தவஇல்லம் சென்று சிவனருள்

நிரம்பிய சீலச்செல்வராகிய அவர்கட்குச் சீர்சிறப்புச் செய்து பொன்னுடையும் போர்த்திப் பாராட்டினர்.

அதனை மனமுவந்தேற்ற நம் கவிமணியவர்கள் "பெருமை பெருமித மின்மை" என்னும் மறைமொழிக்கிணங்க ஆனைக் குட்டிக்குப் போர்த்தும் சிறப்பினை ஆட்டுக்குட்டிக்குச் செய்தது போல் அடியேனுக்குச் செய்தீர்கள் என்று மிக்க பணிவும் இன்சொலும் தோன்றப் பகர்ந்தனர். இது,

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து." —திருக்குறள். ௬௭அ.

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின் பொன்மொழியை வையச் செய்முறையில் போற்றுகின்ற பொற்பாகும்.

1926—1936-வரை சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியின் படியிலாப்பணி (கௌரவ) உதவியாளராத் தொண்டாற்றினர். திருவிதாங்கூர்ப பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடக்குழுவின் உறுப்பினராய்த் திகழ்ந்தனர். அரசியலார் பாடசாலைப் புத்தகஙகளைத் திருத்தும் குழுவில் உடனிருந்து பணியாற்றினர்.

1943-ஆம் ஆண்டில் ஆத்தங்குடியில் நாட்டுக்கோட்டை நகரத்தார் நம் கவிமணியவர்களைச் செட்டிநாட்டரசர் ராசா-சர். அண்ணாமலைச் செட்டியார் தலைமையில் பேரவை ஒன்றுகூட்டிப் பாராட்டிச் சிறப்பித்தனர். அண்ணாமலை அரசர் வெண்பொற் கலம் பல பரிசாக நல்கி மகிழ்வித்தனர்.

1944-ஆம் ஆண்டில் திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் தம் அருமை அன்னையார் பெயரால் பரிசுவழங்க வைப்புப் பொருள் வழங்கினர். 1950-ம் ஆண்டில் கன்னியாகுமரியில் நடைபெற்ற தமிழ்நாட்டின் தென்குமரி எல்லை மாநாட்டில் திறப்புரை நிகழ்த்தினர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக் கௌரவத் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தனர்.

1950-ஆம் ஆண்டில் திருவாவடுதுறைத் திருமடத்து மகா சன்னிதானம் சிவத்திரு. அம்பலவாண தேசிகத் தம்பிரான் அவர்கள் பொன்னுடை போர்த்திப் பாராட்டி அருளினர்.

1952-ஆம் ஆண்டில் நம் கவிமணியவர்கள் பிறந்த தேரூரில் தேரூர்ப் பெருமக்கள் 'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை நினைவு நிலையம்' என்னும் பெரியதொரு மண்டபம் கட்டிக், காண்பார் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைத்துத் தம் செய்ந்நன்றி மாண்பினைத் தெரிவித்துள்ளனர். புலவர்

கோமான் வாழும் காலத்தே நினைவு நிலையம் அமையப் பெற்றதை நினைதொறும் நினைதொறும் எவர்க்கும் கழிமகிழ் தருவதொன்றாகும்.

1953-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் திகழும் பாரதி சங்கத்தினர் நம் கவிமணி அவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டத்தை மிக்க சிறப்பாக நிகழ்த்தினர்.

முதுமைப்பணி

நம் கவிமணியவர்கள் தம் தள்ளாப்பருவத்தும் புறத்துப் போக இயலா நிலைமையிலும் வீட்டிலிருந்துகொண்டே நினைப்பாலும், சொல்லாலும், எழுத்தாலும், ஆள் வாயிலாலும் சூழ வாழும் ஏழைமக்கட்கு எல்லா நலமும் பெருகி அவர்கள் இன்புற்று வாழுமாறு வேண்டும் நற்பணி புரிந்தனர்.

திருவிதாங்கூர்த் தமிழ்மக்களின் அறமுறை வேண்டுகோளுக்குத் தம்முடைய அறிவாற்றலாலும் முழுஆதரவையும் நயந்து நல்கிவந்தனர். அவர்கட்கு இவர்கள் "அறனறிந்து மூத்த அறிவுடையார்" சார்பாய் விளக்கினர்.

முன் நிகழ்ந்த இந்திக் கிளர்ச்சியின்போது தக்க காரணம் காட்டி மறுத்து அஞ்சா நெஞ்சுடன் வீறுகொண்டனர். இஃது இவர்தம் மெய்ம்மையான தாய்மொழியாம் தமிழ்மொழியின் கண் நன்னிலை வழாஅ நடுநிலை நாட்டத்துடன் உள்ள தலைசிறந்த பற்றினை விளக்குகின்றதன்றோ?

பாட்டருமை

நம் கவிமணியவர்களின் பாட்டருமை பகரவொண்ணாதது; காலத்தொடு பொருந்தியது; குழந்தை உள்ளமும் விழைந்து மேற்கொள்ளும் செம்மையது; பண்ணோடு பாடப்படுவது; வண்ணவோசை நயம் வாய்ந்தது; வரிப்பாட்டாம் கீர்த்தனை பொருந்தியது; ஆடற்கியைந்தது; பள்ளிப்பாடம் அனைத்திலும் திகழ்வது; பத்திச்சுவை நனிசொட்டுவது; பழைமையும் புதுமையும் ஓராங்குக் கெழுமியது; கன்னித்தமிழ் மன்னித் தவழ்வது; அறமுறை நிறைந்தது; இன்னும் பல சொல்லொணுச் சிறப்புக்களும் வாய்ந்தது. அப்பாட்டின் மாண்பு புலப்பட ஒருசில முன்னும் காட்டினும். விரிவஞ்சி ஒருசில ஈண்டுங்காட்டுதும், ஆசிரியர் யாத்த நூல்கள்பல. அவற்றுள் சில வருமாறு :

க. மலரும் மாலையும்

பாலுக்குச் சீனியைப்போல்—பசுந்தமிழ்
பாடலுக்கு இன்னிசைபோல்
சோலைக்குப் பைங்கிளியே—உனது
துணையும் பெரிதேஅம்மா. கடு௭.

தென்னெல்லை காத்தாளும் தேவி குமரிநின்
பொன்னடியைக் கும்பிட்டுப் போற்றுகின்றேன்—மன்னுபுகழ்ச்
செந்தமிழ்நாடு ஒன்றாகித் தேவர்நா டொத்துலகில்
சந்ததம் வாழவரம் தா. ௧௮.

பண்டிதரும் கைவிட்டார் பத்தியமும் தீர்ந்ததுயான்
உண்டமருந் தால்குணமோ ஒன்றுமில்லை—அண்டர்
அமரா வதிகாத்த அண்ணலே செந்தில்
குமரா எனையாண்டு கொள். ௨௧.

நம் கவிமணியவர்கள் இளைப்பிரும (ஆஸ்மா)ல் நோயால் பெரிதும் துன்புற்று மருந்துகளால் குணமொன்றும் பெறாது மிகவும் வருந்துங்கால் மெய்யன்பர் ஒருவரால் தூண்டப் பெற்று மேற்குறித்த நிறைமொழிப் பாட்டுடன் சில பாட்டுக்களும் பாடினார். முருகன் திருவருளால் நோய் அப்பொழுதே நீங்கப் பெற்று நலம் பெற்றனர். தெய்வம் தெளிவார் இதனைக் கண்டு தெளிக.

௨. உமார்கய்யாம்

திட்டிக் கதவு தெரிந்ததடா
திறவு கோலும் இல்லையடா
கட்டித் திரையும் கண்டதடா
கண்ணும் மயங்கி நின்றதடா
ஒட்டிச் சிறிது நீநான் என்று
உரைத்த உரையும் கேட்டதடா
நட்ட காலம் பின்னையடா
நான்நீ யற்றுப் போச்சுதடா.

௩. ஆசியசோதி

நீட்டிக் கழுத்தை அறுப்பதற்கோ—அதன்
நெஞ்சை வகிர்ந்து பிளப்பதற்கோ
தீட்டிய கத்தியும் கையுமாக—ஒரு
தீச்சிதர் முன்வந்து நின்றாரம்மா.

௪. மருமக்கள் வழிமான்மியம்

வரி. ௨௪0. வயலைப் பார்த்து வாளனில் கிழட்டுப்
பயலே உனக்குப் பயித்தியம் என்பாய்.
கொத்தை அளந்து கொடுஎன் றால்நீ
வைத்த ஆளோ மாட்டேன் என்பாய்.
௫00. தொந்தியும் கரைந்து சுருங்குவ தாச்சு
சுகந்தத் தூளும் சோப்பும் போச்சு
சும்மா சிரங்கு சொறிவது மாச்சு
சீலைக் குடையும் செருப்பும் போச்சு
தினமும் வெயிலில் திரிவது மாச்சு.

ரு. தேவியின் கீர்த்தனங்கள்

கண்ணாரக் காணும் சுவர்க்கம்

இராகம்—தன்யாசி தாளம்—ஆதி

பல்லவி

கண்ணாரக் கண்டுமகிழ்—சுவர்க்கம்
கனக சபையல்லவோ

அநுபல்லவி

தண்ணார் மதிசூடும்
சாம்ப சதாசிவன்
பெண்ணாளும் பாகன்
பெருமான் அடியவர் (கண்)

சரணம்

பாடிப் புகழ்ந்து நிதம்—நடராசன்
பாதம் பணிந்திடாமல்
ஓடி உலகெங்கும்
ஊரூராய்ச் சுற்றிநீ
வாடி வருந்தி
மலைவதேன் நெஞ்சமே. (கண்)

சு. கவிமணியின் உரைமணிகள்

ஆக்கம் வேண்டுமெனில்—நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டும் அப்பா—ஓயாது
உழைக்க வேண்டும் அப்பா!
நெற்றியில் வேர்வை—நித்தம்
நிலத்தில் வீழ்ந்திடவே
வற்றி வாடாது—சுதந்திரம்
வளர்ந்து வரும்அப்பா!

பேரா இயற்கை

நம் கவிமணி அவர்கள் செந்தமிழ்க்கும், சிவனெறிக்கும், சீர்சால் தமிழகத்திற்கும் செய்யத் தக்கனவெல்லாம் செய்து புகழ்வெய்யராய்த் திகழ்ந்தனர். சில ஆண்டுகளாகப் புறஞ்செல இயலாது அகமுறைந்து நோயுற்று உடல் நலிந்தாராயினும் உளம் சுருங்கினாரல்லர். "ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே, செல்லும்வாய் எல்லாம் செயல்" என்னும் நற்றவத்தினைப் புரிந்துவந்தனர். வரும் மெய்யன்பர்கட்கும், புலவர்கட்கும், பிறர்க்கும் வரையா வள்ளலாய்ச் சொல்விருந்தும் நல்விருந்தும் நாளும் ஆற்றிவந்தனர்.

26-9-1954, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்குத் தம் 78-ஆம் அகவையில் முழுமுதல் நினைவுடன் நம் கவிமணியவர்கள் சிவபெருமான் திருவடி நீழலை எய்தி இன்புற்றனர். அந்நிலையே என்றும் இன்புற்றிருக்குமாறு கொன்றை யந்தார் முழுமுதலை நன்று தொழுவோமாக.

இவர்தம் பேரிழப்பு என்றும் ஈடுசெய்ய வொண்ணாத தொன்றே. நாம் அவர் வழிநின்று அவர்தம் பெருநூல்களுட் கூறியாங்கு ஒழுகி உய்வதும், உய்யச் செய்வதுமே செய்ந்நன்றி மறவாச் சீர்மையாகும். அவர் நூல்கள் என்றும் நின்று நிலவவும் யாவர்கட்கும் எளிதாகக் கிடைக்குமாறு பரவவும் ஆவன செய்வதே மறவா நினைவுக்குறியாகும். அவர்தம் குடும்பத்தார்க்கு நம் ஆழ்ந்தபரிவும் ஆறுதலும் உரியவாகுக.

தமிழ்ப்பேராசிரியர் முத்துசிவனார் மறைவு

ஆசிரியரவர்கள் காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பேராசிரியராகத் திகழ்ந்தனர். மாணவரும் பிறரும் வேட்பப் பணிபுரிந்தனர். எழுத்தாலும் இனிய மேடைப் பேச்சாலும் யாவரையும் எஞ்ஞான்றும் மகிழ்வித்துவந்தனர். இவர்தம் அரும்பெரும் திறனோர்ந்து ஜாம்ஷெட்பூரில் நடக்கவிருக்கும் தமிழ் மாநாட்டுக்குத் தலைமையாக வேண்டி அங்குள்ளார் கம்பிச் செய்தி விடுத்தனர். அச்செய்தி 24-9-1954 காலை வந்துள்ளது.

இந்நிலையில் 23-9-1954 இரவு 10 மணிக்குக் கல்லூரி வட்டத்துள்ள தம் இல்லத்து எதிர்பாராவகையாக இறைவனடி எய்தினர். இவர்தம் இழப்பும் தமிழகத்துக்குப் பேரிழப்பேயாம். இவர்தம் ஆவி இறைதாள் இன்பம் முறையுற எய்துவதாக. இவர்தம் குடும்பத்தார்க்கு நம் ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரியவாகுக.

—இதழாசிரியர்.

மறைவுற்ற தமிழ் நூல்கள்

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி]

(சிலம்பு: உக, பரல்: க, சுO-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய பெருநூலை இயற்றிய அகத்தியர் பாட்டியல் என்னும் சிறுநூலை ஏன் இயற்றினார்? இடைக் காலத்தில் இருந்த புலவர் ஒருவர் அகத்தியர் பெயரால் இயற்றியதாக இருக்கக்கூடும் இந்நூல். பிற்காலத்தில் இருந்த புலவர்கள் சிலர், சங்ககாலத்துப் புலவர்கள் பெயரால் சில நூல்களை இயற்றியுள்ளனர். அத்தகைய நூல்களில் இதுவும் ஒன்றுபோலும். ஆனால், அகத்தியர் பாட்டியல் என்னும் இந்நூல் இடைக்காலத்தில வழங்கிவந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்நூலிலிருந்து இரண்டு சூத்திரங்கள் பன்னிருபாட்டியல் என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை :—

குறிலைந் துடனெடில் கூட்டி நின்ற
ஐ ஔ விரண்டும் இஉ வடக்கிப்
பால குமார வரசு மூப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர். (1)

முன்பிற் செய்யுண் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கொளலே. (2)

95. மாபுராணம். 96. பூதபுராணம்

இப்பெயருடைய நூல்கள் இருந்தன என்பது இறையனார் அகப்பொருள் உரைப்பாயிரத்தினாலும், பேராசிரியர் உரையினாலும், மயிலைநாதர் உரையினாலும், யாப்பருங்கலக் காரிகை உரையினாலும் தெரிகிறது.

"அவர்க்கு (இடைச் சங்கத்தாருக்கு) நூல் அகத்தியமுந் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமும் என இவையென்ப." (இறையனார் அகப்பொருள் உரைப் பாயிரம்.)

"இனிப் படர்ந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம் பூதபுராணம் என்பன சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உபகாரப் படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்கு நூலாகிய தொல்காப்பியம் இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உளதாயிற்றெனக் கொள்க." (தொல்: பொருள்:

"தொகுத்தல் விரித்தல்" என்னும் 96-ஆம் சூத்திரம், பேராசிரியர் உரை.)

"மதிநலங் கவின்ற மாபு ராணம்
புதுநலங் கனிந்த பூத புராணம்"

என்று கூறுகிறது ஒரு பழைய தனிப்பாடல்.

"செய்யுட்க ளோசை சிதையுங்கா லீரளபு
மையப்பா டின்றி யணையுமா—மைதீரொற்
றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றை யுண்டாக்கு
குன்றுமே லொற்றளபுங் கொள்.

என மாபுராண முடையாரும் சொன்னாராகலின்." (நன்னூல் எழுத்தியல், 37-ஆம் சூத்திரம் மயிலைநாதர் உரை மேற்கோள்.)

(குறிப்பு :—இவ்வெண்பா பூதபுராணச் செய்யுள் என்றும் கூறப்படுகிறது. எனவே, இது மாபுராணச் சூத்திரமா அல்லது பூதபுராணச் சூத்திரமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.)

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் கீழ்க்கண்ட மாபுராணச் செய்யுள்களைத் தமது உரையில் மேற்கோள் காட்டுகிறார் :—

"மகரக் குறுக்கத்துக்குப் பயன் மாபுராணமுடையார் எடுத்தோதினார். என்னை ?

"கழிநெடி லடியுங் காலெழுத் தசையும்
பெயரற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழிப வாய்மொழிப் புலவர்"

என்றாராகலின்.

"ஆய்தமு மொற்று யடங்கினு மாங்கதனை
ஓதினார் தொன்னூ லுணர்வுடையோர்—நீதியால்
ஒற்று யடங்கினு முன்கால வேற்றுமையாற்
சொற்றார் மகரச் சுருக்கு"

எனவும்,

"மெய்யென்ற சொல்லானே மிக்கமக ரத்தினையும்
நைய மடங்கு நனியென்னின்—ஐயென்ப
தாவி யெனவடங்கு மஃகிற் றெனின்மகரத்
தேய்விற்கு மஃதே திறம்"

எனவும் கூறினார். இன்னும் மகரக் குறுக்கத்தின் பயன் மாபுராணத்திடத்துக் காண்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

"உயிரென்ற சொல்லானே யொன்பதா மாவி
செயிரின்றிச் சென்றடங்கு மேனும்—பயில்புரைத்தார்

குன்றுதலா லென்னிற் குணம்புரிந்தா ரெனவுந்தான்
குன்றுதலாற் கூறப் படும்"

எனவும்,

"கால விகற்பத்தாற் கட்டுரைக்கப் பட்டவற்றுண்
மூல வியனூன் முறைமையான்—ஞாலத்து
ளெல்லாமெடுத் துரைத்தார்க் காமோ சிலவெழுத்துச்
சொல்லதார்க் காகுமோ தாம்"

எனவும்,

"அசையாக்குந் தன்மைய வேயன்றித் தொடையோ
டிசையாக்கு மேனையவுஞ் சொற்றார்—இசைதொடைதா
மாக்கு மெழுத்தனைத்துஞ் சொன்னா ரசைமுகத்தாற்
றாக்கியநூற் கேற்பத் தொகுத்து"

எனவும்,

"குறிலு நெடிலு மளபெடையு மொற்று
மறினா ரசைக்குறுப்பா மென்பர்—வறிதே
யுயிர்மெய்யு மூவினமென் றோதினா ரென்று
செயிரவர்க்கு நின்றதோ சென்று"

எனவும்,

"வடாது தெனாதென்று வைத்ததனான் மற்றாண்
டடாதனவுஞ் சொற்றா ரினத்தாற்—கெடாததுபோன்
மஃகான் குறுக்கம் வகுத்ததனான் மாட்டெறிந்தா
ரஃகாய்தந் தானு மசைக்கு"

எனவும்,

"ஐயௌமவ் வென்றிவற்றிற் காங்குற்ற ஞாபகமா
னையாது கார நடத்தாதே—மெய்யானே
கற்றாய்ந்த நூலோ ரிகரம் புணர்ந்ததூஉம்
குற்றாய்தந் தானுங் கொளற்கு"

எனவும்,

"சிறப்புடைய வல்ல வெனவிவற்றுட் கொள்ப
சிறப்புடைய வென்பவே சிந்தித்—துறப்பசைக்கட்
காலளவா மொற்றினையுங் கைக்கோடல் காரணமா
நூலளவிற் சொற்றார் நுனித்து"

எனவும்,

"ஐம்மூ வெழுத்து மசைக்குறுப்பா மென்பதன்கண்
உம்மைதா மெச்ச மெனவுரைப்பர்—ஐம்மூன்றின்

மிக்கனவுங் கைக்கோடல் வேண்டி வியன்பொருளை
மெய்ப்படுக்கு மாங்கே விதப்பு"

எனவும்,

"மகரக் குறுக்கம் வகுத்துதா னுய்தற்
சிகரக் குறுக்க முதலாய்ப்—புகரற்ற
நாலொன்று மெண்ணுதே நாட்டுதன் ஞாபகமாய்
நூலொன்றி நிற்றற் பொருட்டு"

எனவும் போந்த இவற்றை விரித்துரைத்துக்கொள்க. இன்னும் மகரக் குறுக்கத்திற்குப் பயன் மாபுராணத்திடத்துக் கண்டு கொள்க. ஈண்டு உரைப்பிற் பெருகும்.

யாப்பருங்கலம் அடியோத்து விருத்தியுரையில் உரையாசிரியர் இவ்வாறு கூறுகிறார்:—

"அகத்திணை யகவலுள் வஞ்சிவாரா.................................
அஃதேயெனிற் பட்டினப்பாலைத் தொடக்கத்தன அகத்திணை வஞ்சியாம் பிறவெனின், அகத்திணையகத்து வஞ்சி வருவது சிறப்பின்றுயினும், சிறுபான்மை வரப்பெறு மென்பாருமுளராகலின் அவையும் அமையுமென்பது. என்னை?

"அகத்திணை யகவயி னிற்ப வஞ்சி
சிறப்பில வெனினுஞ் சிலவிடத் துளவே"

என்பது மாபுராணச் சூத்திரமாகலின்."

யாப்பருங்கலம் ஒழிபியலில் விருத்தியுரைகாரர் மாபுராணத்தைக் குறிப்பிடுகிறுர். அவர் எழுதுவது வருமாறு:—

"நான்கடியும் எழுத்தொத்து வருவனவற்றைத் தலையாகு சந்தம் என்றும், ஓரெழுத்து மிக்குங் குறைந்தும் வருவன வற்றை இடையாகு சந்தம் என்றும், இரண்டெழுத்து மிக்குங் குறைந்தும் வருவனவற்றையும் பிறவாற்றன் மிக்குங் குறைந் தும் வருவனவற்றையும் கடையாகு சந்தம் என்றும் வழங்குவ ரொருசாராசிரியர். தாண்டகங்கட்கும் இவ்வாறே சொல்லுவர். இவற்றை யெல்லாம்............................மாபுராணம் முதலாகிய தமிழ் நூலுள்ளும் புகுதியுடையார் வாய்க்கேட்டுக் கொள்க. இவை யெல்லாம் விகற்பித்தீண்டுரைப்பிற் பெருகும்"

"இனி மாபுராணமுடையார் கூறுமாறு: விகார மாத்திரை யாகிய உயிரளபெடையும், கான் மாத்திரையாகிய வொற்றும் பாட்டுடைத் தலைமகன் பெயருக்கும் அவன் பெயர்க்கு அடை யாளமாகிய சொற்கண்ணும் புணர்ப்பிற் குற்றமென்றுர். என்னை?

"கழிநெடி லசையுங் காலெழுத் தசையும்
பெயரயற் புணர்ப்பினும் பெயரிடைப் புணர்ப்பினும்
வழுவென மொழியு மாபுராணமே."

என்பவராகலின்.

மாபுராணம் இயற்றிய ஆசிரியர் யார் என்பது முதலிய செய்திகள் தெரியவில்லை. மாபுராணம் வெண்பாவும் சூத்திரமும் கலந்து இயற்றப்பட்ட நூலெனத் தெரிகிறது. பூதபுராணத்திலிருந்து வேறு சூத்திரங்கள் கிடைக்கவில்லை.

97. கோயிலந்தாதி

களவியற் காரிகை உரையாசிரியர், கோயிலந்தாதி என்னும் நூலிலிருந்து நான்கு செய்யுள்களை மேற்கோள் காட்டுகிறார். கோயில் என்பது, திருவரங்கம் பெரிய கோயில் எனப்படுகிற ஸ்ரீரங்கம். திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள அரங்கநாதர்மீது அகப்பொருள் துறைகள் அமையப் பாடப்பட்ட அந்தாதி நூல் இது என்பது தெரிகிறது. இந்நூலை இயற்றிய ஆசிரியர், காலம் முதலியன தெரியவில்லை. இந்நூலிலிருந்து, களவியற்காரிகை உரையாசிரியர் நான்கு செய்யுள்களை மேற்கோள் காட்டியுள்ளார். இந்த நான்கு செய்யுள்களில் இரண்டு செய்யுள்கள் செல்லரித்துச் சிதைந்து காணப்படுகிறபடியால், அவற்றை நீக்கி, மற்ற இரண்டு செய்யுள்களைக் காட்டுவோம்.

பிறவா ரணங்கு மணிக்குழை யார்கழல் பேணினரென்
றறைவா ரணங்க ளாற்று மரங்க ரருளிலர் போன்
மறவா ரணங்கள் மடங்கலுக் கோடும் வழிபழிவந்
துறவா ரணங்கின் பொருட்டுரை வோய்வர லோங்கிருளே.

சேர்ந்தசங் கத்த சிறுநுதற் காகச்செவ் வேன் முருகற்
கீர்ந்தசங் கத்தையிட் டாலென் பயன்கட்டி லங்கைச் செந்தீக்
கூர்ந்தசங் கத்துவிற் கோலிய கொற்றவன் வெற்றிச் செங்கை
யார்ந்தசங் கத்தரங்கன் றிருத்தார்கொண் டணிமின்களே.

98. கிளிவிருத்தம் 99. எலிவிருத்தம்

கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த திருஞானசம்பந்தர் தமது திருவாலவாய்ப் பதிகத்தில் இந்த இரண்டு நூல்களைக் குறிப்பிடுகிறார்.

"கூட்டி னார்கிளி யின்விருத்த முரைத்த தோரெலி யின்றொழிற்
பாட்டு மெய்சொலிப் பக்கமேசெலு மெக்கர் தங்களை"

என்று அவர் பாடுகிறார். அதாவது கிளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் இரண்டு நூல்கள் சமணசமய நூல்கள் என்று கூறுகிறார்.

கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட வீரசோழியம் என்னும் இலக்கண நூலின் உரையிலும் கிளிவிருத்தம் எலிவிருத்தம் என்னும் நூல்கள் கூறப்படுகின்றன. வீரசோழிய உரையாசிரியராகிய பெருந்தேவனார் கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் இருந்தவர் ஆவர். வீரசோழியம் யாப்பதிகாரம் 21-ஆம் கலித்துறையின் உரையில் உரையாசிரியர் இவ்வாறு எழுதுகிறார் :—

“ குண்டலகேசி விருத்தம் கிளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தம் முதலாயுள்ளவற்றுட் கலித்துறைகளும் உளவாம் ”

இவ்வுரையாசிரியர் கூறுகிற குண்டலகேசி விருத்தம் என்பது பௌத்த நூல்; இந்நூல் மறைந்துவிட்டது. இதன் சில செய்யுள்கள்மட்டும் கிடைத்துள்ளன. கிளிவிருத்தம் எலிவிருத்தம் நரிவிருத்தம் என்பன மூன்றும் சமணசமய நூல்கள். இவைகளில் நரிவிருத்தம் இப்போதும் இருக்கிறது. கிளிவிருத்தம் எலிவிருத்தம் இரண்டும் கிடைக்கவில்லை. இந்நூல்கள் மறைந்துவிட்டன.

குறிப்பு: பவாநந்தர் கழகம் 1942-இல் அச்சிட்ட வீரசோழியத்தில் கிளிவிருத்தம் என்பதைக் கலிவிருத்தம் என்று தவறாக அச்சிட்டுள்ளது. ஆனால், பழைய வீரசோழியப் பதிப்பில் கலிவிருத்தம் என்றே இருக்கிறது. 1907-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் அச்சிட்ட நரிவிருத்தம் என்னும் நூலில், முகவுரை 4-ஆம் பக்கத்தில் கிளிவிருத்தம் என்றே கூறப்படுகிறது. எனவே, பவாநந்தர் கழகம் 1942-ஆம் ஆண்டில் அச்சிட்ட வீரசோழியப் பதிப்பில் கலிவிருத்தம் என்றிருப்பது தவறாகும்.

100. மல்லிநாதர் புராணம்

மணிப்பிரவாள வசனநடையில் எழுதப்பட்ட ஸ்ரீபுராணம் என்னும் நூலில், 19-ஆம் தீர்த்தங்கரராகிய மல்லிநாத சுவாமி புராணத்தில், பழைய இரண்டு செய்யுட் பகுதிகள் மேற்கோள் காட்டப்படுகின்றன. இந்த மேற்கோள் செய்யுள்களை நோக்கும்போது, மல்லிநாதர் புராணம் என்னும் ஒரு நூல் தமிழில் இருந்திருக்கவேண்டும் என்றும், அது பின்னர் மறைந்துவிட்டிருக்கவேண்டும் என்றும் கருதவேண்டியிருக்கிறது. மேற்கோள்

காட்டப்பட்ட செய்யுட் பகுதிகளை இங்குக் காட்டுவதற்குமுன்பு, மல்லிநாதர் என்னும் தீர்த்தங்கரருடைய கதையை அறிந்து கொள்ளுவது அமைவுடைத்து. இந்தப் புராணத்தின் சுருக்கம் இது :

கச்சகாவதி நாட்டின் அரசன் வைசிரவணன் என்பவன் வீதசோக நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டு அரசாண்டு வந்தான். அந்த அரசன், கார்காலத்தில் ஒரு நாள் வனக்காட்சியைக் காணச் சென்றான். வனத்திலே மிகப் பெரியதோர் ஆலமரத்தினைக் கண்டு வியந்து மகிழ்ந்தான். அந்த ஆலமரம் நூற்றுக்கணக்கான விழுதுகளால் தாங்கப்பெற்று விண்ணுற ஓங்கி எண்டிசையும் பரவிக் கிளைத்துத் தழைத்துத் தளிர்த்துக் காண்பவர் கண்ணையும் மனத்தையும் கவர்ந்து நின்றது. இந்த ஆலமரத்தினைக் கண்டு வியந்து மகிழ்ந்த அரசன் அதற்கு "வனஸ்பதி ராசன்" என்று சிறப்புப் பெயர் கொடுத்து, அந்த மரத்தைச் சுற்றிலும் மேடையும் கைபிடிச் சுவர்களும் அமைத்து அதற்குக் காவலர்களையும் ஏற்படுத்திச் சென்றான். சில காலத்திற்குப் பின்னர் அரசன் அவ்வழியாக வந்த போது அந்த ஆலமரம் அங்குக் காணப்படவில்லை. இடிவிழுந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. இதனைக் கண்ட அரசன் மனம் துணுக்குற்றது. அப்போது அரசனுடைய மனத்திலே நிலையாமை நன்கு விளங்கியது. இதுபோலவே தனது வாழ்க்கையும் அரசபதவியும் நிலையற்றது என்பதையும் இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையற்றவை என்பதையும் உணர்ந்தான். அப்போதே அரசாட்சியைத் துறந்து, துறவு பூண்டு ஸ்ரீதர முனிவரிடத்தில் தீக்கைபெற்றுத் தவம்செய்து கடைசியில் இந்திரபதவியடைந்தான்.

இந்திரபதவியை யடைந்த அரசன், பிறகு வங்கநாட்டு மிதிலாபுரத்தின் அரசனான கும்பன் என்பவனுக்கு மகனாகப் பிறந்து மல்லிநாதர் என்னும் பெயருடன் வளர்ந்து பிறகு துறவுபூண்டு தீர்த்தங்கரர் பதவியை யடைந்து சமணசமயத்தை உலகத்திலே பரவச்செய்து பிறகு வீடுபேறடைந்தார்.

இந்த மல்லிநாதர் புராணத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நூல் முற்காலத்தில் செய்யுளாக இயற்றப்பட்டிருந்தது. அந்த நூலுக்கு என்ன பெயர் இருந்தது என்பது தெரியவில்லை. மல்லிநாதர் புராணம் என்னும் பெயரே இருந்திருக்கக்கூடும். அந்நூல் இப்போது மறைந்துவிட்டது. அந்நூலிலிருந்து இரண்டு செய்யுட்பகுதிகள் ஸ்ரீபுராணத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன என்று கூறினோம். அப்பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

"வாயில் மாடமும் மதிலும் அமைத்துக்
காவ லாளரிற் காப்பு நடுபடுத்
தரிதினிற் போகி யடவியினி லாடல்
மருவியது விடுத்து மறித்துமந் நெறியே"

இச்செய்யுட்பகுதி, வைசிரவண அரசன் ஆலமரத்திற்குச் சிறப்புச் செய்ததைக் கூறுகிறது.

"இது இதற் குற்ற திறைவ என்றும்
கதுமென மாநனி கலங்கின ளாகி
வெடிப்பட முழக்கத் திடியுரு மேற்றிற்
பொடிப்பொடி யாகியது பொன்றினமை கண்டு
நெடிது நினைந்து நெஞ்சு கலுழ்வெய்தி
இருவினைப் பயத்திற் றிரிதரும் உயிர்கட்
கருவலி யுடைமையும் ஆண்மையும் அழகும்
திருமலி செல்வமும் தேசும் வென்றியும்
இளமையும் எழிலும் இராச விபூதியும்
வளமையும் கிளைமையும் மறித்து நோக்குதற்கு
நிறுத்துதல் அருமையை நிறுத்திய திதுஎன
வெறுத்துடன் விடுத்தனன் வினைப்பயன் யாவையும்"

இது, வைசிரவண அரசன் ஆலமரம் அழிந்ததைக் கண்டு அதன் மூலம் நிலையாமை யுணர்ந்ததைக் கூறுகிறது. இது அகவற் பாவாலான நூலெனத் தோன்றுகிறது.

(தொடரும்)

கவிமணி பிரிவிரங்கற்பா

[நாஞ்சில் திரு. கா. கணபதி]

இனிய மொழியாம் தமிழ்ச் சொல்லில்
எளிய சொல்லே கண்டுவந்து
இனிய பாலர் பெரியோர்கள்
எவரும் களிக்கக் கவியாத்து
இனிய வாழ்வின் சுவைகண்டு
இனிய பணிகள் பலவியற்றி
இனிய எம்மைப் பிரிந்தீர்கொல்
இனிய தமிழின் கவிமணியே!

காவியத்தில் சில ஓவியங்கள்

[திரு. த. வடிவேலன்]

இவ்வுலகமே இயற்கையின் வடிவை—இறைவனின் ஆற்றலை என்றும் எடுத்தியம்பிநிற்கக் காண்கின்றோம். உலகு படைத்த இறைவன் உலகு நிலைபெறுமளவும் மனிதனையும் வாழவே வழி செய்கின்றான். அதற்கெனவே உயர்ந்தோரையும் உலகிற் குதவுகிறான். மனித இனமோ பலவித மாறுபாட்டங்களினால்—மயக்க உணர்வால் தனது வாழ்வை இவ்வுலகிலேயே முடிவுக்குக் கொண்டுவந்துவிடுகின்றது. அம்மக்களுள் சிலர் இறையொளி யால்—பகுத்தறிவால் என்றும் நின்று நிலவுமாற்றல் பெற்றனர். தாம் நின்று நிலவுவது மாத்திரமா, பகுத்தறிவுள்ளம் பயன் கருதியது? பரந்துசென்ற அவர்கள் பேரருள் தம்மினத்திற்கும் பெருவழி காட்டியது. அவர்கள் கண்ட நல்வழிகளே இன்று நம்முன் இன்பம் நல்கும்—இறைவழி காட்டும் காவியப் பூஞ் சோலையாகக் காட்சிதருகின்றது. நாமும் அப் பொதும்பரில் புகுந்து, அறிவுக் காட்சிகளைக் கண்டு ஆனந்தமடைவோம்—அன்புநிலை யுணர்வோம்—பண்பின்வழிச் சென்று என்றும் இறவாப் பேரொளியாய்த் திகழ்வோம்.

கள்வன் மகன்

பண்பறிந்த பால்மொழியுள்ளம் தருணமறிந்து பொய் மையையும் வாய்மையாக்கியது. அன்னை தன் கையால் அண் ணலின் முதுகை நீவுகிறாள்.

தமிழன் தன் பிள்ளையைத் தாலாட்டிச் சீராட்டும் தவழ் நடைப்பருவம் முடிந்ததும் தரையில் விடுகின்றான். தளர்நடை கண்டு களிக்கின்றான். ஓடியுலவும் உரம்பெற்ற குழந்தையுள் ளங்கள் உலகவாழ்வின் கடமைகளை—உண்மைகளைத் தாமே அறிய ஆவல் கொள்ளுகின்றன. அன்னைசெய்யும் வாழ்க்கை நலப்பணியை அன்பின் வடிவான அம்மணியுஞ்செய்ய முற்படு கின்றாள். மணல் நிறைந்த இடத்தில் சிறுவீடு செய்கின்றாள்; சிறு உணவு சமைக்கத் தொடங்குகிறாள்; அதுகண்ட அவள் தோழியரும் உடன்சேர்ந்து கொள்ளுகின்றனர். அவர்கள் வருங்கால வாழ்வு மண் விளையாட்டிலே மாட்சியுறுகின்றது. இன்றும் நம் குழந்தைகளில் சில பெண்குழந்தைகள் சிறுவீடு கட்டி விளையாடவும், சில ஆண் குழந்தைகள் சிறு தேருருட் டவுங் காணலாம். பல குழந்தைகள் இன்று சூழலின் பயனால்

பகுத்தறிவற்று உலகியலை விளங்கும் ஆற்றலற்றனவாக இருக்கலாம். ஆனால் அன்று தமிழர் மரபு, தன் கடமையை உணர்ந்து பணியாற்றியது. தமிழ் நாகரிகத்தில்—அன்பு வாழ்வில் தம் கடமையைத் தாமே செய்து இன்பமடையும் பணியில் நிலைத்து நின்றனர் தமிழர்களனைவரும். அவர்கள் வழித்தோன்றல்களும் வாழ்வின் உண்மையைச் சிறுபருவத்திலேயே உணர்ந்து வாழ்வினை விளையாட்டாகவே ஆரம்பிக்கத் தொடங்கினர். "வாழும் பிள்ளையை மண்விளையாட்டிலே தெரியும்" என வழங்கும் பழமொழியும் இதுகுறித்தே எழுந்ததாகும்.

கடமையுணர்ச்சியுடன் பொழுதுபோக்காக—உடல் நலமளிக்கும் பயிற்சிகளையும் வாழ்வின் ஒரு பகுதியாக அமைத்தனர். அதற்கேற்ற விளையாட்டாகப் பந்தாடலையே விரும்பிப் பயன்கொண்டனர் பண்டைத் தமிழ் மகளிர் பருவமடையாப் பெண்கள் பந்தாடுங்காலையில் இளம் வாலிபர்களும் அவர்களிடைப் புகுந்து அவர்கள் விளையாட்டைச் சிறப்பிக்கும் செயல்களைச் செய்தலுமுண்டு. விளையாட்டிலே வாழ்க்கையைக்கண்டு பந்தாடும் பாவையர்கள் இறைவனின் திருவிளையாடலை உணர்கின்றனர். பந்தாடும் வேளையில் வந்தூடே செல்லும் வாலிபர்களின் உள்ளத்துட் புகுந்து அன்பென்னும் அரும் பண்பினை விளக்கும் பேற்றினை—இன்ப உலகை ஆக்கும் பெருமையினைத் தமக்குரிய தாக்குகின்றனர். இது அவர்களால் எண்ணிச் செய்யப்படும் ஒரு விளையாடலாக முடியுமா? இதுவே இயற்கையின் பெருவிளையாடல்.

அன்று பலகாலம் தோழியர் பலருடன் கூடிச் சிறுவீடு கட்டி விளையாடினாள்; பந்தாடினாள்; இன்று மங்கைப்பருவமடைந்துவிட்டாள். இனிமேல் பல இடத்தும் ஓடியாடித் திரிதல் பண்பாகாது என உணர்கின்றாள். அவ்விதமாயின் அவளது வீடே அவளது கன்னிப்பருவத்துப் பாசறையாகின்றது; பலகாலம் பழகியோர் அன்று தம் பயன்கருதி—சுயநலங் கருதி வாழப் பழகவில்லை; பண்பறிந்து வாழ்ந்தனர்; பலகாலம் கூடிவிளையாடிய தோழி தனது உடன் கூட்டத்தவளிடம் நலனறிய வருகின்றாள். கன்னிப்பருவம் காதல் நிகழ்ச்சிகளுக்கே முதலிடமளித்தலியல்பு. அன்று விளையாடுங் காலத்தில் தம் விளையாட்டிடை—சிறுவீடு கட்டல், சிறுசோறு சமைத்தல், பந்தாடல் ஆகியவற்றிடைக் காட்சியளித்த—விளையாடல் புரிந்த காளைகளைக் கன்னியர் தம் வீட்டிலிருப்பதால் காண்பதரிது. மகளிர் தம் வீடுவிட்டு வெளிச்செல்லா அவ்வேளையில் விளையாட்டில் வாழ்க்கைகண்ட—உளங்கலந்த ஆடவன் தன் உளங் கவர்ந்த கள்வியைப் பார்க்க எண்ணுகிறான். அவளுறையும்

இல்ல வீதிவழியாக வருகின்றான். காதலியின் வீடு தென்படு கின்றது. அன்பிற்குரியாள் மாத்திரமா அன்னையும் உடன் இருக்கின்றாள் அங்கே. அன்னையும் உடன் இல்லையானால் அவர் களது அன்புநிலை மாண்பு பெறுதற்கில்லை. எவ்விதமாவது தன் உளம் விரும்பும் காதலியை வெளியிலழைத்து வேடிக்கை செய்யவேண்டுமென்ற எண்ணத்தின் வழிப்படுகின்றான் அண் ணல். விடாயற்ற நிலையிலும் விடாயினை வருவித்துக்கொள் கின்றான். "விடாய் மிக்கது உண்ண நீர்வேண்டும்" என்ற ஒரு குரல் வெளியில். விடாய்க்குரல் செவிப்பட்ட அன்னை உள்ளம் அணியிழையை நோக்குகிறது. உள்ளிருந்த அன்னை காதல் விடாயை அறியாள். உண்மையில் நீர்விடாய் ஏற்பட்ட தென எண்ணுகிறாள். நீர்வேட்கை மிக்கோன் எவனாயினும் அவன் விடாய்தீர்த்தலைப் பெரும்பணியாக இல்லுறை மகளி ராம் பண்டையோர் கருதினர். "மகளே நீர்வேட்கை மிக்க அம்மைந்தனுக்கு இப்பாத்திரத்தில் நீர்கொடுத்து விடாய் தீர்த்துவா" என்ற குரல் பிறக்கின்றது அன்னை வாயிலிருந்து. கன்னியின் காதலுள்ளம் காளையின் வேட்கையுளத்தைத் தணிக்க விருப்புடன் எழுகின்றது. அன்னை சொற்படி பாத்தி ரத்தில் தண்ணீரைக் கொண்டுவருகின்றாள் வெளியே.

அன்று சிற்றில் சிதைத்து, கூந்தலிற் புனைந்த மாலையை அறுத்து, ஆடும் பந்தினை எடுத்தோடித் திருவிளையாடல் புரிந்து, அன்பின் திறனை அனைவர்க்குமுணர்த்திய அந்நல்லோன், தான் மேற்கொண்ட வேட்கை விளையாடலை இன்றும் விரும்பியே வந்தான் என்பதும் நங்கை உள்ளமறியாததல்ல. தாகந் தீர்க்கும் நீர் வேண்டிய தலைவன், தையலின் வளைக்கையைப் பற்றுகிறான். அவன் மேற்கொண்ட அணியிழையின் விருப்பு அளவுகடந்தது. ஆனாலும் அன்னைமுன் என்ன நிகழ்த்து வானோ என்றஞ்சுவதால் நாணம் மிகுகின்றது அவளுள்ளத்தில். தன்னையறியாமலே, "அன்னாய் இவன் செய்ததைப் பார்" என்று வாய் குளறுகின்றது.

அன்னை வெளியில் வருகின்றாள். காதலியின் உரை கேட் டதும் அன்னை வருவாள் என்பதனையுணர்ந்த தோன்றல் தான் பற்றிய காதலியின் கையை விடுகின்றான். அப்பொழுதும் அன்பின் பிணிப்புற்று நின்ற அந்நங்கை ஆடவனை விட்டு நீங்கி உள்ளே சென்றாளல்லள். அன்னைக்குத் தலைவனை மதிப்புடன் காட்டவேண்டுமென்ற அவளது அன்புள்ளம் தருணமறிந்து தகுந்த விடை பகர்கின்றது. யாது காரணமாக அவல ஒலி பிறந்தது என்று அன்னை கேட்பதற்கிடையிலேயே அன்னையும் அண்ணலை அன்புடன் ஆதரிக்குமாறு "வேறொன்றுமில்லை,

இவ்வரும்பெறலோன் உண்ணுகின்ற நீர் விக்கினன்'' என்ற அவளது அறிவுள்ளத்தின் ஆற்றலே அமைதி ஒலியாக வெளி வருகின்றது. அன்னை அம்மைந்தனின் முதுகைப் பலமுறை தடவுகிறாள். மைந்தனுள்ளம் மங்கையின் மதிவலியின் மாண்பை மதிக்கின்றது. உள்ள உவகை கண்ணிற்பட்டுக் காட்சியளிக் கின்றது. கடைக்கண் பார்வையால் காதலியைக் கனிவிக்கின் றான் அக்கள்வன் மகன். தலைவனது கடைக்கண் நோக்கினைக் கொல்வான்போல் நோக்கி என்றுரைத்த அந்நங்கையுள்ளமே நகைக்கூட்டஞ் செய்தானக் கள்வன் மகன் என்று கூறுவதைக் காண்கின்றோம். இதுதான் உண்மை அன்பினை விளக்கும் இயற்கையின் மாண்பு.

"செறாஅச் சிறுசொல்லும் செற்றார் போனோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு"

என வள்ளுவரும் உண்மை அன்பினைக்—காதலின் மாட்சியை இனிது விளங்கவைக்கின்றார். இக் காதல் நாடகத்தையே கன்னி தன் தோழியின் கருத்திற்கினிய காட்சியாகக் காட்டுகிறாள்— உள்ள உவகைச் சம்பவமாக எடுத்துரைக்கின்றாள். இதனை எழில்மிகு ஓவியமாகப் புனைந்து உள்ளத்தை உணர்ச்சி கொள்ள வைக்கின்ற உயர்வுள்ளம்—உத்தமப்பண்பு அனை வர்க்கும் வாய்த்தலரிது. அரும்பெரும் புலவர் கபிலருக்கே அப்பேறு உரியதாகின்றது. இக்காட்சியொன்றினையும் இன்று சென்று காண்போம்.

"சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதைபரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா என்றாளென யானுந்
தன்னையறியாது சென்றேன் மற்றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னையலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா அன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்" (கலி : ருக)

சேனாவரையத்தில் ‘ செய்கு ’

[வித்துவான். திரு. செ. வேங்கடராமச் செட்டியார்]

‘செய்கு’ என்பது ‘செய்வேன்’ என்று பொருள்படுகின்ற தன்மையொருமை வினைமுற்றாகும். இச்சொல்லைப் பற்றிப் பவணந்திமுனிவர்,

“செய்கென் ஒருமையும் செய்குமென் பன்மையும்
வினையொடு முடியினும் விளம்பிய முற்றே”

என விதி கூறியுள்ளார். ‘செய்கு என்ற ஒருமை முற்றும் செய்கும் என்ற பன்மை வினைமுற்றும் பெயரொடு முடிதலேயன்றி வினையொடு முடிந்தாலும் வினைமுற்றேயாம்’ என்பது, இச்சூத்திரக் கருத்து. இதற்கு உதாரணம்.

காண்கு வந்தேன், காண்கும் வந்தேம் என்ப. இச்சொற்களையும் விதியையும் கண்டபொழுது இவையேன் வினைகொண்டு முடிந்தும் வினையெச்சம் ஆகாமல் வினைமுற்று ஆகின்றன? என்னும் வினா என்னுள்ளத்தில் எழுந்தது. ‘பெயர்த்தனன் முயங்க’; ‘உண்டனன் வந்தான்’ என வினைமுற்றுக்கள் வினைகொண்டு முடிந்தவழி “வினைமுற்றே வினையெச்சமாகலும்”. என்ற சூத்திரவிதியால் ‘முற்றெச்சம்’ என்று பெயர் பெறுகின்றனவே! இவை சொல்லால் முற்றுவினையாயினும் ‘பெயர்த்து முயங்க’ ‘உண்டு வந்தான்’ எனப் பொருள்படுதலால் வினையெச்சம் ஆகின்றன அன்றோ? இவற்றைப் போலவே ‘காண்கு வந்தேன்’ என்பதும் ‘காண வந்தேன்’ என்றே பொருள்படுதலால் இதனையும் வினையெச்சத் திரிபு என்னாமல் ‘வினையொடு முடியினும் விளம்பிய முற்றே’ எனத் தனிவிதி கூறக் காரணமென்னை? என்பது புரியாமலே விடுத்தேன்.

பின்னர் சேனாவரையம் படிக்கும் வாய்ப்புப் பெற்றேன்.

274. “அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்”

என்னும் சூத்திர வுரையில் சேனாவரையர் ‘காண்கு வந்தேன்’ என்பதை உதாரணம் காட்டினர். “செய்கென் கிளவி யவ்வியல் திரியா தெனவே” பெயர்த்தனென் முயங்க யான்’ (குறுந். 84) எனவும் “தங்கினை சென்மோ” எனவும் “மோயினன் உயிர்த்த காலை” எனவும் ஏனை முற்றுச் சொல் வினைகொள்ளுங்

கால் அவ்வியற்றிரியும் என்பதாம். அவை திரிந்தவழி வினையெச்சமாதல் "வினையெஞ்சு கிளவி வேறுபல் குறிய" என்புழிப் பெறப்படும்.

இருசாரனவும் பெயர் கொள்ளாது வினைகொண்டவழிச் செய்கென் கிளவி திரியாதென்றும் ஏனைய திரியுமென்றும் கூறிய கருத்தென்னை எனின்? நன்று சொன்னாய் "காண்கு வந்தேன்" என்றவழிச் செய்கென் கிளவி வினையெச்சமாய்த் திரிந்ததாயின் செய்தெனெச்சமாதற் கேலாமையின் செயவெனெச்சமாய்த் திரிந்ததெனல் வேண்டும். வேண்டவே செயவெனெச்சத்திற்குரிய வினைமுதல் வினையும் பிறவினையும் அது கொள்வான் செல்லும். வினைமுதல் வினையல்லது கொள்ளாமையிற் செயவெனெச்சமாய்த் திரிந்ததென்றல் பொருந்தாது. பிறிதாறின்மையின் முற்றுச் சொல்லாய் நின்றதெனவேபடும். அதனான் அவ்வியற்றிரியாது என்றார் என்பது. எனச் சேனாவரையர் வரைந்த விளக்கத்தைப் படித்தபொழுது என் ஐயம் நீங்கியது. அமைதியுற்றேன்.

இலக்கணம் படிக்கும் மாணவர்க்கு எவ்வெவ்வகையில் ஐயம் தோன்றும் என்பதைத் தம் நுண்ணறிவால் உய்த்துணர்ந்து வினாவெழுப்பி விடைகூறிச் செல்வது சேனாவரையர் சிறப்பியல்பாகும். அத்தகைய விடங்களைப் படிப்போர் அவருடைய நுண்மாண் நுழைபுலத்தை வியவாமல் நயவாமலிருத்தலியலாது. இவருடைய இத்தகைய பேரறிவைத் தொல்காப்பிய சொல்லதிகார வுரையாற்கண்ட மாதவச் சிவஞான யோகிகள், தம் 'சூத்திர விருத்தியில்' இவரைக் குறிக்குமிடத்து "வடநூற் கடலும் தமிழ்நூற் கடலும் நிலைகண்டுணர்ந்த சேனாவரையர்" என வரைந்திருக்கின்றார். இக்கூற்று உண்மையே வெறும் புகழ்ச்சியன்று என்பதை, உரைநூல்கட்கு வரம்பெனத் திகழும் சேனாவரையத்தை யூன்றிப் படிப்போர் உணர்வர்.

'செய்கு என்னும் சொல் வினைகொண்டு முடியினும் திரியாது' என்னுங் கருத்தைத் தொல்காப்பியர், பிறர் கூற்றாகக் காரணங் காட்டாது வாளா கூறியிருப்பவும் சேனாவரையர் அதனை அவ்வளவில் விடாது தம் நுண்ணறிவால் நுனித்து நோக்கிக் காரணங் காட்டிச் செல்வது ஆராய்ச்சி யுணர்வுடையார்க்கு அருவிருந்தாய் அமைவதாகும்.

எனினும் அவ்வாராய்ச்சியிலும் ஒரு சிறிது ஐயம் உண்டாயது. நன்னூல் விருத்தியை மாணவர்க்குப் பாடம் சொல்ல நேர்ந்தபொழுது 'செய்கென்னொருமையும்' என்று தொடங்கும் சூத்திரவுரையில் 'செய்கு' என்பது வினையொடு முடிந்த

வழியும் முற்றேயாதற்குரிய காரணம் யாதும் கூறாமலும் சேனா வரையர் கூறிய காரணங்களையேனும் காட்டாமலும் சென்றிருத் தலையும் "வினைகொண்ட வழியும் முற்றாகும்" என்பது "எப் பொருள் எச்சொலி னெவ்வா றுயர்ந்தோர், செப்பின ரப்படிச் செப்புதல் மரபே" என்றபடி மரபாகக் கொள்க என்ற கருத் தையே வரைந்திருத்தலையும் கண்டேன். சேனாவரையத்தை ஆழ்ந்து படித்து அதன் உயர்வை உள்ளவாறுணர்ந்து புகழ்ந் துரைக்கும் சிவஞான முனிவர், இவ்விடத்து அச் சேனாவரையர் கூறிய முடிபை யெடுத்துக்காட்டி விளக்காது 'மரபு' என்ற பெயரால் அமைதி கூறிச்செல்லக் காரணமென்னை யென என் னுள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது. பின்னர் ஒரு முடிவிற்கு வந்தேன்.

'காண்கு வந்தேன்' என்ற எதிர்கால முற்றுச் சொற்கு சேனாவரையர் உரைத்த அமைதி "காண்பேன் வந்தேன்" என்றாற் போன்ற ஏனைய எதிர்கால முற்றுகளுக்கும் ஏற்புடை யதாய் 'அதிவியாத்தி' என்னும் வழுவின்பால் படுவதாகச் சிவஞான முனிவர் எண்ணி இங்ஙனம் கூறியிருக்கவேண்டும் என்பதே அம்முடிபு. 'காண்கு வந்தேன்' என்பதற் குரைத்த அமைதி 'காண்பேன் வந்தேன்' என்பதற்கும் பொருந்துவது எங்ஙனமெனின்? கூறுவன் :—"காண்பேன்" என்பது எதிர் கால முற்றாகலின் இறந்தகாலத்திற்குரிய 'செய்து' என்னும் எச்சமாகத் திரிதற்கேலாது. எனவே எதிர்காலத்திற்குரிய 'செய'வெனெச்சமாகத் திரிந்ததெனல் வேண்டும். வேண்டவே செயவெனெச்சத்திற்குரிய வினைமுதல் வினையும் பிறவினையும் அது கொள்வான் செல்லும் வினைமுதல் வினையல்லது அது கொள்ளாமையின் அங்ஙனம் திரிதல் இயலாது. பிறிதாறின் மையின் வினைகொண்டு முடிந்த வழியும் முற்றுச் சொல்லாய் நின்றதெனவேபடும் என்று முடிபு செய்துவிடலாமன்றோ? இங்ஙன முடிவுசெய்யின் பொருந்தாதென்பது 'பெயர்த்தனென் முயங்க யான்' என்பதை முற்றெச்சமாகக் கொள்ளவேண்டு மென்ற சேனாவரையர் கூற்றானே தெள்ளிதின் புலப்படும். 'காண்பேன் வந்தேன்' என்பதும் 'பெயர்த்தனென் முயங்க' என்பதும் போலவந்த முற்றெச்சமேயாம். எனவே சேனா வரையர் 'செய்கு' என்னும் சொல்லிற்கு உய்த்துணர்ந்துரைத்த அமைதி மிகைபடக் கூறலாய்க் 'காண்பேன் வந்தேன்' என் னுந் தொடருக்கும் சென்று முற்றெச்சம் என அவருரைத்த உரையோடே மாறுகோடலாய் முடிதல் காண்க. தொல்காப்பிய சூத்திரமும் சிவஞான முனிவர் கருத்திற்கே அரண் செய்வதாக அமைந்துளது. என்னை?

" செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்விய றிரியா தென்மனார் புலவர் "

எனப் பிறர் கூற்றாகவே யுரைத்து வினைகொண்டு முடிந்த வழியும் வினைமுற்றாதற்குரிய காரணம் தமக்குப் புலப்படாமையையுய்த்துணர வைத்துள்ளாராதலின் என்க. இக்கருத்தினரல்லாக்கால் 'அவ்வியறிரியாது' என்றே ஓதியிருப்பரன்றோ? இதனால் 'செய்கு' என்னும் சொல் வினைகொண்டு முடியினும் முற்றேயாதல் தொல்லாசிரியர் ஆணையாகக் கொள்ளலே சிறப்பு என்பது புலப்படும்.

தமிழ் மகவு தாலாட்டு

[புலவர், திரு, ராம. பெரியகருப்பன்]

(முன் செல்வி உஅ-ஆம் சிலம்பு உஎஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெல்லம் இனிக்குமென்றும் வேம்பு கசக்குமென்றும்
சொல்லப் பழகவில்லை சுவைத்துப் பழகிவிட்டாய்!

தாய்ப்பால் அமுதுணவோ தருமுணவைச் சுவைப்பதற்கோ
வாய்ப்பாகு ஊற்றெடுத்து வடிய முகம்பார்த்தாய்!

தாலாட்டித் தூங்கவைத்துத் தளிர்முகத்தை பார்க்கையிலே
மேலான தாய்பதற மெல்லச் சிரித்ததுமேன்?

கண்வளராய் என்றன் கருத்தை வளர்த்திடுவாய்
பண்வளர்க்கும் பசுந்தமிழே, பால்வடிவே, தாலேலோ!

முழங்காலை மண்டியிட்டு முன்னோக்கி நீதவழ்ந்து
வருங்கால முன்னேற்ற வாழ்வை விளக்குகிறாய்!

தளர்ந்த நடைநடக்கத் தாவி எழுந்திடும்நீ
வளர்ச்சி குறைவென்று வளைந்து விழுகின்றாய்!

வாழ்க்கைத் துணைவழியில் வயது முதிர்ந்துவிட்டால்
வாழ்க்கைத் துணையாக வாய்த்தனையே கண்மணியே!

சான்றோய் எனஉன்னை ஆன்றோர்கள் தான்புகழ
ஈன்றாளின் மனத்திற்கு எழுச்சிதர வந்தனையே!

பிள்ளைகளைப் பெற்றவளர் பேற்றைச் சிறப்பிக்கும்
வள்ளுவனின் வாக்குக்காய் வளரும் இலக்கியமே!

சொல்லில் சுவையூற்றித் தொட்டஇடம் தான்இனிக்கும்
அல்லி மலர்ப்பூவே அன்புருவே கண்வளராய்!

திரு. வி. க. படத்திறப்பு*

[டாக்டர் திரு. மு. வரதராசனார்]

அருமைத் தமிழர்களே,

இந்த மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் படமாக விளங்குகிறார் நம் தலைவர் திரு. வி. க. சென்னை அரண்மனைக்காரத் தெருவிலே ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற தமிழாசிரியர்கள் மாநாட்டிலே பெருஞ் சொற்பொழிவாளராக விளங்கினார் திரு. வி. க. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த மாநாட்டை நடத்தும் பொறுப்பு எனக்கும் என்னுடைய நண்பர் அன்பு-கணபதிக்கும் இருந்தது. அந்த மாநாட்டுக்குச் சொற்பொழிவாளராக வந்தார் திரு. வி. க. வந்து மாநாட்டைக் கண்டு உளம் பூரித்தார். தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் இருந்து தமிழாசிரியர்கள் ஒன்று கூடியிருக்கிறார்களே என்பதைக் கண்டு மகிழ்ந்தார்.

"எங்கள் காலத்தில் தமிழ்ப்புலவர்கள் ஒன்றுசேரமாட்டார்கள். அப்படி அவர்கள் ஒன்றுசேர்ந்தாலும் பிரியும் பொழுது அவர்கள் குழப்பமில்லாமல் பிரியமாட்டார்கள்," என்று சொன்னார்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழாசிரியர்கள் ஒன்றுபடாமல் இருந்தார்கள். கருத்து வேறுபாட்டைக் கலக வேறுபாடாக வளர்த்து வந்தார்கள். திரு. வி.க. வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராக இருந்தார். ஆனால் அநேக ஆண்டுகள் அவர் அங்குத் தமிழாசிரியராக இருக்க இயலவில்லை. தமிழாசிரியர் உலகம் அவரைத் தொண்டாற்றுவதற்காக வேறு உலகத்துக்கு அனுப்பியது. அவர் கற்ற தமிழ் வயிற்றுணவுக்கும், உள்ளத்தைப் பண்படுத்துவதற்கும் முதலில் பயன்பட்டது. அவர் தமிழாசிரியர் தொழிலை விட்ட பிறகு தேசிய இயக்கத்தில் சேர்ந்து நாட்டுக்காகத் தொண்டாற்றினார். செய்தித்தாள் நடத்தினார். வாழ்க்கையிலே பல அல்லல்களைப் பட்டார். பற்பல துறைகளில் அவருடைய தொண்டு விரிவடைந்தது. ஆனால், இறுதி வரையிலும் அவர் தமிழ் உலகத்திலே இருந்துகொண்டு தொண்டாற்றி வந்தார். தமிழும், தொழிலாளர் உலகமும் அவரை என்றும் விடவில்லை. நோய் வாய்ப்பட்டிருந்த பொழுதுங்கூட அவர் தமிழை மறக்கவில்லை.

* 11-7-54 அன்று அண்ணாமலைநகர் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நிகழ்ந்த தமிழாசிரியர் மாநாட்டில் நாவலர் எஸ். எஸ். பாரதியார் தலைமையில், திரு. வி. க. வின் உருவப் படத்தைத் திறந்துவைத்து ஆற்றிய சொற்பொழிவு.

அவர் எதை மறந்தாலும், தமிழையும் தொழிலாளர்களையும் மறக்கவில்லை.

இறுதி நாட்களில் குடியிருந்த வீட்டில் அவருக்கு இருக்க உரிமை இல்லாமற் போயிற்று. பகலெல்லாம் இரவெல்லாம் சிந்தித்துக்கொண்டு பழகிய இடத்தில் அவர் இறுதி நாட்களில் இருக்க இயலாத நிலை வந்தது. இறுதிக்காலத்தில் செய்யுள் வடிவில் நூல்கள் பல எழுதினார். உரைநடையில் எழுதலாமே என்று கேட்டேன்; அதற்கு அவர் சொன்னார், "உரைநடையில் எழுத எனக்கு விருப்பம் இல்லாமலில்லை. ஆனால் கண் இழந்த எனக்கு யாப்பு அமைதியோடு கூடிய பாடல்களைச் சொல்லி மற்றவர்களை எழுதும்படி சொல்வது எளிதாக உள்ளது. என் மனம் பலவற்றை வெளியிட விரும்புகிறது. கருத்துக்கள் பல வற்றை நினைவில் சேர்த்துத் தொகுத்துச் சொல்வதற்கு யாப்பு பயன்படுகிறது." அவர் மனத்திலே இருந்தவற்றை வெளியிட, அங்கிருக்கும் அன்பர் யாரேனும் ஒருவர் எழுதுகோலால் எழுதிய பின்னர்த்தான் அவர் மனம் நிம்மதி அடையும். ஒரு நாள் இரவு 7-மணிக்குச் சென்றேன். "எழுத யாரும் வரவில்லையே என்று எண்ணிக்கொண்டிருந்தேன் சமயத்துக்கு நீ வந்தாயே" என்று மகிழ்ந்து அவர் மனத்திலே இருந்ததையெல்லாம் என்னிடம் கொட்டினார். அக்கருத்துக்களை என்னிடம் கொட்டினால்தான் மகிழ்ச்சியாய் இருக்கமுடியும் என்று சொன்னார். 100 அடிகள்வரை நான் எழுதினேன். இஃதோடு நிறுத்தி விடுவார் என்று எண்ணினேன். அவர் விடவில்லை; 180 அடி வரை அவர் சொல்லியதை நான் எழுதிய பின்புதான் என்னை விட்டார். அந்த நூல்தான் "படுக்கைப் பிதற்றல்". "அப்பாடா! இப்பொழுதுதான் விடுதலை பெற்றேன். இன்று இரவு நன்கு உறங்குவேன்" என்றார்.

உள்ளத்திலே பல கருத்துக்கள் பிறந்து ஆர்வம் தூண்ட அந்த ஆர்வத்தை அவர் பயன்படுத்திய பின்னர்த்தான் அவர் அமைதி அடையமுடியும். திரு. வி. க. அவர்கள் எந்த மாநாட்டுக்கும் போவார், எந்தக் கூட்டத்துக்கும் போவார், எங்கே திறப்புவிழா என்றாலும் அவரைக் காணலாம். கல்லூரிகளிலே அவர் பேசுவார்; உயர்நிலைப் பள்ளிகளிலே பேசுவார்; சைவ சமயக் கூட்டத்திலும் பேசுவார்; கிருத்தவர்களின் கூட்டத்திலும் பேசுவார்; தொழிலாளர்கள் கூட்டத்திலும் பேசுவார். "உடல் தளர்ந்தநிலையில் தாங்கள் அமைதியாக இருந்துவிடுவதுதானே" என்று பலர் இவரைக் கேட்பதுண்டு. எல்லாரிடமும் சென்று நல்லவற்றைச் சொல்லித் தொண்டாற்றும் வேட்கை சிறிதும் குறையாமல் இருந்து வருகிறது என்று சொன்னார். திரு. வி.

க.விடம் அஞ்சாமை உண்டு, புரட்சியான கருத்துக்கள் பல அவருள்ளத்திலும் இடம் பெற்றிருந்தன. அரசியல் புரட்சி மட்டுமல்ல, எந்தப் புரட்சியாக இருந்தாலும் அதை அமைதி யோடு எண்ணி ஏற்றுப் போற்றவல்லவர் அவர்.

அவருடைய உள்ளத்திலே புத்தம் புதிய கருத்துக்கள் என்றும் தோன்றிய வண்ணம் இருந்தன. திரு. வி. க.விடம் புதுமை உள்ளம் மட்டுமல்ல, இளமை உள்ளமும் இருந்தது. "உங்களுக்கு உச்சிக்குடுமி ஏன்? கிராப் வைத்துக்கொள்வது கெடுதியா?" என்று கேட்டேன். "மூளையை வெப்பம் தாக்கிக் கெடுக்காமல் இருப்பதற்குக் கிராப்புதான் நல்லது. நான் பல ஆண்டுகளுக்கு முன்பே மொட்டையும் குடுமியுமாகக் காட்சி அளித்தேன். என்னை நம்பிப் பழமை விரும்பிகள் பலர் இருக் கிறார்கள். அவர்களுக்கு ஏன் என்றால் மனம் நோகவேண்டும்? இதற்காக மற்றவர்கள் என்னைப் பின்பற்றவேண்டாம்," என்றார்.

திரு: வி. க. வின் தூய அன்பை, பகைமை எள்ளளவும் அறியாத அன்பைப் போற்றாதவர்கள் இல்லை. திரு. வி. க. பல துறையிலே ஆராய்ந்து பேசுவார். தொழிலாளர் உலகத்திலே அவர் போராட்டம் நடத்தியபோது அரசாங்கம் அவரை வீட்டி லேயே சிறை இருக்கும்படி வைத்தது. அப்பொழுது ஒரு விடியற்காலை அவரைக் கண்டேன். அப்போது சொன்னார், " தம்பி, எவற்றைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை; தோல்வி யைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை; தொழிலாளர்களின் கண்ணீர் அமைதிபெறுகிற வரையிலே எனக்கு அமைதியில்லை" என்று துணிவுடன் மொழிந்தார்.

மிக்க துன்பம் நெருக்கிய நாட்களிலும் அவரிடம் கலங்கா மையும் அஞ்சாமையுமே கண்டேன். மனைவி மக்களைப் பிரிந்து அவர் பலகாலமும் தமையனாரின் குடும்பத்தோடு வாழ்ந்தார். அதே நேரத்திலே தூய துறவியாகவும் இருந்தார். அவர் சென்ற இடமெல்லாம் உயரிய கருத்துக்களையே "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற கருத்தையே எங்கும் பரப் பினர். தமிழ்மொழி ஆட்சிமொழியாகவேண்டுமென்று விரும் பினார். திரு. வி. க.விடம் பொறுமை உண்டு; அளவுகடந்த பொறுமை உண்டு. திரு. வி. க.விடம் பகைக்கமுடியாத பண்பு இருந்தது. அவரை எதிர்த்துப் பேசுகிறவர்களையும் பகைத்துக் கொள்ளமாட்டார். என்றும் ஈரநெஞ்சம் உடையவர் அவர். நற்றிணை ஆசிரியர் சொல்லிய 'மென்கட செல்வம்' திரு. வி. க.விடம் என்றும் அமைந்திருந்த குன்றாச் செல்வமாகும்.

இளகிய நெஞ்சம் உடையவர் தலைவர் திரு. வி. க. அவர் களுக்குச் சில சமயங்களில் துணிவு பிறப்பதில்லை. யாரோ சில

ருடைய கண்ணீர் அவருடைய நெஞ்சை நெகிழ்வித்ததே அதற்குக் காரணம். திரு. வி. க. வாழத் தெரியாதவர் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படி திரு. வி. க. வாழத் தெரியாத வள்ளல். பாரி முதலிய ஈரநெஞ்சத் தலைவர்களின் பட்டியிலேதான் திரு. வி. க.வைச் சேர்ப்பேன். அவர் படுத்த படுக்கையைச் சுற்றிக்கொண்டு நோயோடு வேறு வீட்டில் அவர் குடிபுக நேர்ந்தது. இந்த நிலைகளைப் பற்றியும் அவர் அவ்வளவாகக் கவலைப்பட்டு நொந்ததில்லை. தமிழ்நாட்டிலே அனைவரும் ஒன்றுபட்டு வாழவில்லை. தமிழன் ஒருவன் தலையெடுத்தால், ஒரு தமிழன் நல்ல நிலையில் வாழ்ந்தால் மற்றொரு தமிழன் பொறுமைப்படுகிறான். இந்தப் பொறுமை நஞ்சு போகவில்லையே. அடிமை மனப்பான்மையும் போகவில்லை. நாடு எப்படி உய்யப்போகிறது என்றுதான் அவர் என்றும் கவலைப்பட்டார்.

சிறந்த சான்றோரின் வாழ்வைப் பற்றித் திருவள்ளுவர் கூறுவது என்ன ?

"நத்தம் போற்கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது."

புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ்நிலை நிற்பதாகும் சாவும், அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை என்கிறார். இக்குறளுக்கு உதாரணமாக அமைந்தது திரு. வி. க. வாழ்ந்த வாழ்வு. பிறர் நோகும்படி எதையும் சொல்லமாட்டார். அப்படிச் சொல்லவேண்டிய நிலை வந்தால் மெல்லமெல்ல நழுவிவிடுவார்.

இவர் உடல்நிலைக்கு ஏற்றவாறு உண்ணும் உணவும் தேடி நாடி உண்பதில்லை. தக்கது இன்னது தகாதது இன்னது என்று உணவுபற்றி எல்லாம் இவர்தம் நூலிலே பலவேறு உடலோம்பலைக் குறித்து எழுதியிருக்கிறார். ஆனால், இந்தக் கருத்து நூலிலேமட்டும் இருக்கும். எந்தக் கருத்துக்களையும் மேடையிலே பேசிவிட்டு வெளியே கண்மூடித்தனத்துக்கு இடம் கொடுப்பவர் அல்லர். நெறியை என்றும் விட்டுநெகிழாப் பெரிய வீரர் அவர். ஆயினும், அவருடைய அன்பு நெஞ்சம் நெகிழ்ச்சி உடையது. "ஒருவரும் எனக்குக் கொள்ளிவைக்க வேண்டாம், ஒருநாள் இந்த உயிர்போகும் அன்று இந்த உடலை எல்லோரும் சேர்ந்து தீப்பற்றவைத்துவிடுங்கள் எல்லோருக்கும் இந்த உரிமை இருக்கட்டும்," என்றார்.

கொள்ளிவைக்கப் பிள்ளை இல்லையே என்று பலர் இன்றும் கலங்குகிறார்கள். ஆனால் திரு. வி. க. வின் உள்ளம் வேறு வகையாக இருந்தது. தம் வாழ்வைப் பொருட்படுத்தாது தூய

நெறியில் போற்றிய பெரியார் அவர். யாரேனும் திருவாசகம், தேவாரம் பாடினால் அமைதியாகக் கேட்டு மகிழ்வார். பெரியோர் பாடலைப் பாடுதலே அவர் போற்றிய பூசை. தொண்டு செய்வதையே அவர் வாழ்க்கை என்று கருதினார்.

பெரியோர்களே! திரு. வி. க. அவர்கள் நோயற்ற உடலோடு வாழ விரும்பினார். இயலவில்லை; கண் இழந்தபிறகு பழைய வீட்டிலேயே அமைதியாக இருக்க விரும்பினார்; இயலவில்லை. அவர் நீண்டநாட்களாக இருந்த வீட்டைவிட்டுச் செல்லவேண்டுமென்று நெருக்கடி வந்தது. கண் இழந்த எனக்குப் படி எங்கே, பள்ளம் எங்கே, நன்கு தெரிந்து பழகிய வீட்டைவிட்டு வெளியே செல்லவேண்டி இருக்கிறதே என்று சிறிது வருந்தினார்.

"உணவுத் தொடர்பாகத் தாங்கள் எழுதியபடி நடப்பதில்லையே, ஏன்?" என்று கேட்டால், "எனக்கென்று தனியே உணவா? மற்றவர்களுக்கு என்ன கிடைக்குமோ அதுவே எனக்கும் போதுமானது. எனக்குத் தனிச் சிறப்பான ஏற்பாடு எனினும் வேண்டா. என்னால் யாருக்கும் தொல்லையிருக்கக் கூடாது" என்பார். நாட்டுப்புறங்களிலே பச்சைமிளகாய் போட்டுப் பலருக்கும் செய்த காரமான உணவு கிடைத்தாலும் அதையே இவரும் உண்பார். வேகாத இட்லியாகக் கிடைத்தாலும் விருந்தோம்பும் ஏழைகளின் மனம் நோகாமல் உண்டு வருவார்.

திரு. வி. க. வின் வாழ்க்கை தோல்வியா? வெற்றியா? திரு. வி. க. வைப் பின்பற்ற விரும்புவோர் இந்தக் கேள்வியைக் கேட்க விரும்புவார்கள். திரு. வி. க. விடம் மிகப் பொருள் விரும்பாமை என்னும் உயர்ந்த கொள்கை இருந்தது. பெண் உலகம் ஆண் உலகத்தைவிடச் சிறந்து இருக்கவேண்டும் என்பது அவர் அவா. இதை அவர் உயர்ந்த கொள்கையாகக் கருதினார். தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டிருக்கவேண்டும் என்று கருதினார். தமிழர்களை மற்ற நாட்டாரும் மதிக்கவேண்டுமென்று பாடுபட்டார். இப்பொழுது நாம் என்ன காண்கிறோம்? அஞ்சல் அலுவலகம் முதல் புகைவண்டி நிலையம்வரை இந்தியைக் காண்கிறோம். தமிழுக்குத் தக்கமதிப்பு நாட்டிலேயே இல்லையே. நம்மளவில் உரிமையோடு பிரிந்து நாம் வாழ்ந்தால் பல துறையிலும் முன்னேறமுடியும் என்றும், அப்போதுதான் உலகத்திற்கு உற்ற உதவி செய்யமுடியும் என்றும் அவர் கருதலானார்.

உலகத்திலே தலைவர்கள் பலர் தமிழ்நாட்டைப் பற்றிய பிரச்சனையைக் கவனிக்காமல் இருப்பார்களானால் கூட்டுக்

குடும்பங்களும் ஒன்றுபட்டு இருக்கமுடியாததைப் போல, நம் மொழி முதலியவற்றைப் புறக்கணித்து நடக்கும் கூட்டு அரசாங்கமும் ஒன்றுபட்டு இருக்கமுடியாது என்று அவர் தம் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். பிரதமர் நேரு காஷ்மீரை மதிப்பதுபோல முக்கால் பங்கு பற்றுவது தமிழ்நாட்டின்மீது இருக்குமானல் சேர்ந்து வாழுங்கள். இல்லையேல் பிரிந்து வாழுங்கள். நாம் மற்ற நாட்டாரைப் போற்றுவதைப்போல் அவர்களும் நம்மைப் போற்றினல் சேர்ந்து வாழ்வோம்; இல்லையேல் பிரிந்து வாழுவோம் என்ற உறுதியான கொள்கை திரு. வி. க. விடம் இருந்தது. மற்றவர்களைப்போல முயல் வேட்டையில் விருப்பம் வைக்காதவர் திரு. வி. க.

> "கானமுய லெய்த அம்பினில் யானை
> பிழைத்தவேல் ஏந்தல் இனிது."

"காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறிதவறுமல் எய்த அம்பு ஏந்துதலைவிட, வெட்டவெளியில் நின்ற யானைமேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் சிறந்தது," என்பது குறள் நெறி. அதுவே திரு. வி. க. வின் உயரிய கொள்கைகளின் அடிப்படையில் இருந்தது.

எதிர்கால மரபு வாழவேண்டும். நாம் மட்டும் அதற்கு உரிய முயற்சிகள் செய்வோம். யானையைக் கொல்லாமல் வேல் தப்பி வந்தாலும் அந்த வேலே சிறந்தது என்ற வள்ளுவர் கொள்கையுடைய வீரர்களுக்குத் திரு. வி. க. வின் வாழ்க்கை வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

தமிழ் நாடு

வேங்கடமே தென்குமரி வேலையெல்லை நாடு
மென்மைகன்னி இனிமைகனி மேன்மைமொழி நாடு
தேங்கமழும் பொதிகைமலை தென்றலுமிழ் நாடு
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு
பாங்குபெறு பாலிபெண்ணை பாவைபொன்னி நாடு
பாவளர்ந்த வைகையொடு பழம்பொருநை நாடு
தேங்குசுனை பளிங்கருவி தெளிசாரல் நாடு
சிற்ருேடை கால்பரந்த செய்யதமிழ் நாடே.

'உரிமை வேட்கை'—திரு. வி. க.

கானல் வரி

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனர், மயிலம்]

மாதவியைக் கோவலன் பிரிதற்குக் கானல்வரிப் பாடல்களே காரணம் என்பது யாவரும் அறிந்ததே. முதற்கண் யாழ் கொண்டு கோவலன் பாட, அவன் பாடல்களில் அகப்பொருட் சுவைமிக்குக் களவில் தலைமகன் கூற்ருகவே அமைந்த கருத்துக்கள் நிரம்பியிருந்ததால், அவன் வேருெருத்திபால் எண்ணம் கொண்டான் என எண்ணிய மாதவி, தனக்குக் கருத்தில்லையேனும் தானும் வேருெருத்தன்பால் எண்ணம் உடையவள் போலப் பாட, அதுகேட்ட கோவலன், அவள் மனம் பிறிதாயினுள் என எண்ணியவனுய்ப் பிரிந்தான். "யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினைவந்து உருத்ததாகலின்" பிரிந்தான் என்ருர் இளங்கோவடிகள். ஊழ் காரணம் என்ருலும் அதை விடுத்து நாம் உள்நுழைந்து காரணம் காணவேண்டுவது சாலச் சிறந்ததாம். கோவலன், மாதவி ஆகிய இருவரிடையில் குற்றம் யாரிடத்தது என்பதே நாம் காணவேண்டுவது. ஈண்டு திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் கூறியதைக் காண்பாம்.

*"இந்திர விழாவில் இம்மாதவி அரங்கேறி, திருமாற்குரிய தேவபாணி முதல், திங்களைப் பாடும் தேவபாணியீருகப் பல வகைத் தேவபாணி பாடி, பாரதி, கொடுகொட்டி, பாண்டரங்கம் முதலாகவுள்ள பதிஞெருவகைக் கூத்தும் ஆடி மக்களைக் களிப்பிக்கின்ருள். அவளுடைய ஆடலும் பாடலும் அழகும் மக்கள் மனத்தை இன்புறுத்தக் கண்டு கோவலன், "ஊடற் கோலம்" உறுகின்ருன். இங்கேதான், அவன் மாதவியைப் பிரிதற்குத் தோற்றுவாயாகிய மனப்பிளவு தோன்றுகின்றது"

கோவலன் ஊடல் கடலாடு காதையில் காணப்பட்டது.

"..............................வானவன் விழவும்
ஆடலும் பாடலும் அணியும் கடைக்கொள
ஊடற் கோலமொ டிருந்தான்"

என இளங்கோவடிகள் கூறினர். "அவன் ஊடுதற்குக் காரணம் திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு; இவள் ஆடலிற் காலம் நீட்டித்தலாலும் பலரும் இவளைப்பற்றிப் பார்த்தலிற் பொருமை

*சிலப்பதிகார ஆராய்ச்சி, பக்கம் 66.

யாலும் வந்த வெறுப்புமாம்" என்றார் அரும்பத உரைகாரர். அடியார்க்கு நல்லாரும், 'திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு' என ஊடற்குக் காரணம் கூறிப், பின்னரும் "இனி இவளாட லும் கோலமும் தனது அறிவு நிறையோர்ப்புக் கடைப்பிடிகளைக் கைக்கொண்டுவிடுதலாலே பிறக்கும் இவ்வாறும் என்னும் வெறுப்போடிருந்தான் எனினும் அமையும்" என விளக்கமாக எழுதினர். திரு. ஒளவை. சு. அவர்கள் இவ்விடத்துக்கொண்ட ஊடலே பின் பிரிவிற்குத் தோற்றுவாயாக அமைந்தது என்பர். இது எவ்வாறாயினும் கோவலன் கானல்வரிப் பாட்டைத் தொடங்குகையில் ஊடல்குறிப்பே யில்லாதிருந்தான் என்று நாம் அறுதியிடலாம். முன்குறித்தபடி ஊடற்கோலம் கொண்ட கோவலனை மாதவி பின்னர்த் தன் மனையகத்துச் சென்று, தன்னைப் பலவகையிலும் அணிந்துகொண்டு அவன் உவக்குமாறு கூடலும் ஊடலும் அளித்தாள்.

"கூடலும் ஊடலும் கோவலற் களித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்"

என்பர் இளங்கோவடிகள். ஊடியிருந்தவனாதலின் மனைக்கண் சென்றவுடன் முதற்கண் கூடலை அளித்துப் பின்னர் ஊடலை யளித்தாள் என்றார் அடிகள். மாதவி, தொடக்கக் காலமுத லாகவே "கலவியும் புலவியும் காதலற் களித்து" வந்ததாகவே அடிகள் கூறியுள்ளார். அவ்வாறே இந்திர விழாக்காலத்தில் மாதவியின் ஆடல் முதலியவை பிறரையும் இன்புறுத்தல் பொறாது ஊடிய கோவலனை அவளும் பின்னர்த் தெளிவித்து மகிழ்வித்தாள் என்க. அதனால் கோவலனும் ஊடலைவிட்டான் என்க. மறுநாள் கடற்கரைக்குச் சென்ற காலத்தில் மாதவி யாழ் இசைக்கவேண்டினளாக அவனும் அவள் மகிழவேண்டும் என்ற எண்ணத்துடனேயே இசைத்தான். அவன் மனதில் ஊடற்குறிப்பேயில்லை யென்னலாம்.

"மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்கும்" என்றார் இளங்கோவடிகள். எனவே யாழிசைத்துப் பாடிய அக்காலத்தில் அவன் தூய எண்ணத்தினனாகவேயிருந்தான் ஆதலின், அவன் வேறு குறிப்புடையன் என எண்ணுதற்கில்லை. பின்னரும் மாதவியின் பாடலைக்கேட்ட கோவலன் அவள் வேறு குறிப் பினள் என உணர்ந்தானேயன்றித் தன் பாடல்களும் அக்குறிப் பினைத்தரும் என்றுணர்ந்தானில்லை, அவன் மனத்தில் அஃதில்லை யாதலின். அதனாலன்றோ "கானல்வரி யான்பாட" என்றே பின் னர்க் கூறினான்? எனவே கோவலன்பால் யாதொரு குற்றமும் தொடக்கத்தில் இல்லை என்னலாம்.

இனிக் கோவலன் வேறு குறிப்பினன் போலவே பாடினன் என்றாலும் மாதவி அவ்வாறு பாடியது பெருங்குற்றமாம். குல மகளிர்க்குரிய இயல்பு அன்று அது. அன்றியும் அவள் அவ்வாறு பாடியதும் அவன் தன்னைத் தவறாகவே புரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனேயே பாடினாள். அவள் பாட்டில் மாயப் பொய் கலந்திருந்தது. அதனால்தான் தன்னைப் போலவே அகச்சுவை ததும்பப் பாடினாள் எனக் கொள்ளாமல் வேறு குறிப்பிற் பாடினாள் எனக் கொண்டான் கோவலன்.

"கானல்வரி யான்பாடத் தானொன்றின்மேல் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள்"

என்று வெறுத்தான் அவன். அவளும் மாயப்பொய் கூட்டினாள் என்பதை இளங்கோவடிகளே நன்கு வெளிப்படுத்தினார். கோவலன் பாடிய பின்னர்த்தான் பாடத் தொடங்கும்போது

"கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ்வாங்கித்
தானும்ஓர் குறிப்பினள்போல்.........பாடத் தொடங்கும்"

என்றார் அவர். கோவலன்தான் ஓர் குறிப்பினன்போற் பாடவில்லை, அவனுக்கு அது கருத்தின்மையின். அவளுக்குக் கருத்தானமையின் அதற்கேற்பப் பாடினாள். அதனால் அவள் பிற குறிப்பினள் என்பதை எளிதில் மேற்போக்காக உணர்ந்தான். உடனே பிரிந்தான். திரு. ஔவை. சு, அவர்கள் கூறுவதுபோலக் கோவலனுக்குச் சினம் முன்னின்றமையின் அவள் குற்றம் உடையவளா இல்லாதவளா என்பதை ஆராயும் அறிவு அடங்கியது. ஒருகுணம் மிக்ககாலத்து ஒருகுணம் அடங்குவது இயற்கை. எனவே 'கானல்வரி'யில் குற்றம் காணுவதென்றால் மாதவிபால் காணவேண்டும் என்னலாம்.

'திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுஓச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி. —சிலப், கானல்வரி: உ.

பாராட்டுரை*

[திரு. V. ஆனந்தராசு, எம். ஏ. எல். டி.
தென்னார்க்காடு மாவட்டக் கல்வித்துறைத் தலைவர்]

மதிப்பிற்குரிய தலைவரவர்களே! ஆசிரியர் பெருமக்களே!

சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி எய்துகின்றேன். பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் பெருமகனார் இயற்றிய திருக்குறளுக்கு எழுதிய உரைகள் எல்லாவற்றினையும் மலர்ச் செண்டு போலத் தொகுத்துத்தந்த ஆசிரியர் தண்டபாணி தேசிகர் அவர்கட்கு என் பாராட்டு உரியதாகுக. தேசிகர் அவர்கள் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கிறார் என்பதைத் தமிழாசிரியர்களே பாராட்டிப் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்துவது மிகவும் பாராட்டுதற்குரியது. அதிலும், தமிழரின் கண்மணிபோன்ற தமிழைத் திக்கெட்டும் பரப்பத் தமிழ் முழக்கம் புரிந்துவரும் இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இந்தப் பாராட்டு விழாவை நடத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

இப்பெரும் விழாவிலே தமிழாசிரியர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க ஆசைப்படுகின்றேன். இன்று தமிழரிடையே, குறிப்பாக பள்ளி பயிலும் மாணவர்களிடையே, ஒரு மறு மலர்ச்சி தோன்றியுள்ளது என்பதை மிகைப்படக் கூற விரும்பவில்லை. மாணவர்கள் தமிழ்ப்பெருங் காவியக்கலையைக் கூர்ந்து பயில முன்வந்துள்ளனர். அவர்கள் எளிதில் தமிழ் நூல்களைப் பயிலவும் எம்மதத்திற்கும் எந்நாட்டினர்க்கும் தொடர்புடைய திருக்குறளை நன்கு கற்றுத் தெளியவும் தமிழாசிரியர்கள் தொண்டு புரிவார்கள் என்று நம்புகிறேன். இப்பெரும்பணியில் தமிழாசிரியர்கள் கைம்மாறு கருதாது பணியாற்ற வேண்டுமென்று மிகப்பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மாணவர்களிடையே தோன்றியுள்ள இந்தப் புத்துணர்ச்சியை நன்முறையில் பயன்படுத்தித் தமிழ்மக்களிடையே குறள்நெறி வளரப் பணியாற்றுமாறு உங்களை மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடிக்கின்றேன்.

---

*11-7-54-இல் அண்ணாமலை நகர், பட்டமளிப்பு விழா மண்டபத்தில் நிகழ்ந்த தமிழாசிரியர் மாநாட்டில் ஆற்றிய பாராட்டுச் சொற்பொழிவு.

பேராசிரியர் திரு. ஆ. முத்துசிவன்

[பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம் எம், ஏ., பி. ஓ. எல்.,]

"பேராசிரியர் முத்துசிவன் இறந்துவிட்டாரா? சென்ற வைகாசி மாதம் நடந்த திருக்குறள் மாநாட்டிற் பேசினரே! சித்திரை மாதம் நிகழ்ந்த சிலப்பதிகார விழாவிற் சொற்பெருக் காற்றினரே! மார்கழி மாதம் கொண்டாடிய பாரதி ஜயந்தி விழாவில் உரைவிருந்தளித்தாரே! அவர் மறைந்துவிட்டாரா?" என்று அன்பர்கள் கேட்கிறார்கள்; அளவிலாத துன்பம் அடைகிறார்கள்; 'இவ்வளவு இளம்பருவத்திற் பிரிந்துவிட்டாரே!' என்று இரங்குகிறார்கள்.

ஆறு மாதத்துள் மூன்று முறை இலங்கைக்கு வந்து தமது குணப் பெருமையாலும், தமிழ்ப் புலமையாலும், சொல்வன்மையாலும் அன்பர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட அவரை இழந்துவிட்டோமே என்பதை நினைக்கும்போது தாங் கொணுத்துயர் ஏற்படுகிறது. தமது பெயருக்கு ஏற்ப முத்து முத்தாகப் பேசும் ஆற்றல் கைவரப்பெற்ற அவருடைய பேச்சைக் கேட்டவர்களுடைய உள்ளத்தைவிட்டு அவர்தம் இனிய பேச்சும், புன்முறுவல்பூத்த முகமும் இன்னும் மறையவில்லை, ஆனல், அவரோ மறைந்துவிட்டார். என்செய்வது? இதுதான் உலக இயல்பு!

உரைநடை எழுதுதற்கும், சொற்பொழிவாற்றுதற்கும், கவிதைகளை இனிமையாகப் பாடி அவற்றின் நயங்களை விளக்குதற்கும் அவர் புதுவழிகளைக் கையாண்டு புகழ்பெற்றார். அவர் எழுதிய **அசோகவனம், கவிதை, மின்னல்கீற்று, அசலும் நகலும்** முதலிய நூல்கள் அவர்தம் புலமையின் தனிச் சிறப்பை நன்கு காட்டுகின்றன.

புங்குடு தீவிலே நடந்த சிலப்பதிகார விழாவிலே சிறந்த கவிதையின் இயல்பை விளக்குதற்கு அவர் பாடிக் காட்டிய பாடல்கள் அவ்விழாப் பந்தரிற் குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களுடைய உள்ளத்திலே கவிதையைப் பற்றியதொரு புத்துணர்ச்சியை உண்டாக்கின.

"பாக்காவது கமுகம் பழம் பருப்பாவது துவரை
மேற்காவது கிழக்கே நின்று பார்த்தால் அது தெரியும்"

என்று தொடங்கும் பாட்டைக் கூறி, "இதனைச் சிறந்த கவிதை என்று யாரும் கூறுவார்களா?" என்று அவர் வினவினர். அப்பொழுது அங்கிருந்த மக்கள் அடைந்த மகிழ்ச்சி கண்கொளாக் காட்சியாகும்.

நகைச்சுவை ததும்பப்பேசி மக்கள் மனத்தை மகிழ்விக்கும் ஆற்றல் அவருக்கு இயல்பாகவே அமைந்துளது. இதனல் அவருடைய விரிவுரைகளுக்குத் தமிழ்நாட்டில் தனிமதிப்பு ஏற்பட்டது. தம் விழாக்களைச் சிறப்பாக நடத்த விரும்பிய சங்கத்தினர் அவரை அழைக்கத் தவறுவதில்லை. அவர் விரிவுரை நிகழ்த்தாத விழாக்களும், அவருடைய ஆதரவு பெறாத சங்கங்களும் தமிழ்நாட்டில் மிகக் குறைவு எனலாம். எமது தமிழ் மறைக் கழகத்தின் ஆதரவாளராகவுமிருந்து அவர் பல தொண்டுகள் செய்துளர். சென்ற ஆண்டிலே தில்லிமாநகரிலே நடந்த ஆறாவது தமிழ் விழாவிலே பங்குபற்றிச் சொற்பொழிவாற்றினர். இந்த ஆண்டு நடக்கும் ஏழாவது தமிழ் விழாவுக்கு முன்னர் அவர் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

பாரதியாருடைய பாடல்களை நன்கு சுவைத்துத் தாம் பெற்ற இன்பத்தைப் பிறரும் நன்குபெறத் தக்க முறையில் அவற்றை எடுத்துக்கூறி விளக்குதலிலும் அவருக்கு அவரே நிகர் எனலாம். "அமரகவி பாரதி" என்னும் நூலிலே பாரதியாருடைய பெருமைகளையும் அவருடைய பாடல்களின் சிறப்புக்களையும் அழகாக விளக்கியுள்ளார். கலிங்கத்துப் பரணியினையும் நந்திக்கலம்பகத்தையும் இலக்கியத் திறனய்வுடன் வெளியிட முயன்று வந்தார். இப்பெரு முயற்சி முடியுமுன் அவர் பிரிந்துவிட்டார்; பேராசிரியர் முத்துசிவன் அவர்கள் சமயப் பற்றும் மிக்கவர். தேவார திருவாசகங்களில் நல்ல ஈடுபாடுடையவர். சைவசித்தாந்த உண்மைகளை இக்கால விஞ்ஞான உண்மைகளோடு பொருத்திக் காட்டிச் சைவசமயத்தின் சிறப்பை நன்கு விளக்கும் பேராற்றலும் படைத்தவர். அண்மையிலே அவர் எழுதிய நடராச தத்துவம் என்னும் நூல் இதற்குச் சான்று ஆகும். "கடவுளில்லை" என்று கூறும் மனப்பாங்கு படைத்த இளைஞர்கள் பலரைத் தமது ஒழுக்கத்தாலும் உரையாலும் அவர் நல்வழிப்படுத்தியுள்ளார்.

அழகப்பா கல்லூரியிலே தமிழ்ப் பேராசிரியராகவிருந்து அவர் ஆற்றிய தொண்டுகள் பலப்பல. உடனசிரியர்களுடைய மதிப்புக்கும் போற்றுதலுக்கும் உரியவராகத் திகழ்ந்தார். மாணவர்களிடத்தும் அவர் பேரன்புகாட்டி அவர்களுடைய முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கினர். அவர் சென்ற

சென்ற இடமெல்லாம் அவருடைய மாணவர்கள் அவரை வர வேற்றுச் சிறப்புச் செய்தார்கள். ஈழத்து மாணவர்கள் பலருக்கு அவர் செய்த உதவிகள் அளவிறந்தன. கைம்மாறு கருதாது உதவிசெய்யும் பேரியல்பிலும் அவர் சிறந்து விளங்கினார். தாம் செய்த பேருதவிகளையுஞ் சிறியனவாகவே அவர் கூறிக்கொள் வார். "சில யாழ்ப்பாண மாணவர்களுக்கும் இடம் கிடைத்து விட்டது. என் முயற்சி சிறியது; மாணவர்களின் தகுதி பெரி யது" என்று இருமாதங்களுக்கு முன்தான் எனக்கு எழுதினார். இது "பணியுமாம் பெருமை" என்னும் வள்ளுவர் வாக்கை எனக்கு நினைப்பூட்டிற்று.

பயிலுதற்கு இனிய பண்பிலும் அவர் தலைசிறந்து விளங் கினார். அவரை ஒருமுறை தானும் சந்தித்து உரையாடியவர்கள் அவரை எக்காலமும் மறக்கமாட்டார்கள். "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்" என்பர். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அவர் விளங்கினார். பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு எத்தகையதென்பதை அவருடன் நெருங்கிப் பழகிய வர்கள் நன்கு அறிவர். "பாக்கியம் பெரும்பித்தும் பயக்குமோ என்று சானகி அனுமனிடம் கேட்டாள். அன்பும் அப்படித் தான்" என்று அவர் தம் நண்பரொருவருக்கு எழுதினார்.

பெருங்குணங்களின் கொள்கலமாக விளங்கித் தமிழ் மொழிக்கும் தமிழினத்துக்கும் அருந்தொண்டாற்றிய பேராசிரியர் முத்துசிவன் அவர்கள் 23-9-'54-ஆம் நாள் இரவு 9-15 மணிக்குக் கல்லூரி வட்டத்திற்குள் உள்ள தமது இல் லத்தில் திடுமென உயிர்நீத்தார்கள்; பிரியுங்காலை அவர்கட்கு அகவை 43. இவ்விளவயதிலேயே அவர்களுடைய பிரிவு ஈடு செய்ய முடியாததொரு பெரும் பிரிவாகும். அவரை இழந்த தால் அவருடைய குடும்பத்தினர், சுற்றத்தார், நண்பர்கள், நாட்டினர் மாத்திரமன்றித் தமிழ் மக்கள் யாவருமே துன்பமும் வாட்டமும் அடைந்துவிட்டனர். இளமையிலேயே தம் புகழை நிறுவி மறைந்த அவருடைய இன்னுயிர் இறையடியில் இன்புறுக.

திரு. வி. என். குமாரசாமியார் மறைவு

இப்பெரியார் சிறந்த தவஇருக்கை விளக்கனூராவர். தவ இருக்கை எனினும் யோகாசனம் எனினும் ஒன்றே. இவர் சாயநூல் பெருவணிகருமாவர். இவர்தம் இல்லக்கிழத்தியார் திருமதி. சீதாலட்சுமி அம்மையாரும் தவஇருக்கைப் பயிற்சி யுடையரேயாவர். அம்மட்டோ இத்தக்கார் இருவரும் சிறந்த தமிழ்ப் பற்றுடையராய்க் கருத்தொத்த காதலராய் மனையறம் பேணுவதுபோல் வணிகத்துறையினையும் பேணிவந்தனர். தவ இருக்கையால் தாங்கள் நோயின்றி நலம்பெற்றுவருவதை எல்லாரும் எய்தி இன்புற்றுவாழவேண்டும் என்னும் நன்னோக்குடையவர். அதற்காம் தொண்டுபுரிந்து வந்தனர். சிறுவர் பலர்க்கு ஊணுடையோடு கல்வியும் பயிற்சியும் தம் இல்லத்து நல்கினர். பெரியார் இருபாலாரும் தம்மில்லத்து வந்து பயில விரும்புவார்க்கு வேண்டும்போதெல்லாம் முகமலர்ந்து பயிற்சி அளித்து வந்தனர். பயிற்சிபெற்ற இருபாலாரும் உடலுரம்பெற்று, நோய் நீங்கி இன்புற்று வாழ்கின்றனர். இப் பெருந்தகையார் திருக்குறளை நன்கு பயின்றவர். பயின்றார்மாட்டுப் பேரன்புடையவர். பலர்க்கும் பயிற்றியவர். திருக்குறள் அவதானம் திரு. சுப்பிரமணியதாசவர்களைத் தம்மில்லத்தே பலமுறை தங்கச்செய்து அவர்கட்குப் பேராதரவுபுரிந்த புரவலரும் ஆவர்.

அம்மட்டோ இருவரும் பல்வேறிடங்களிலும் அவைகளிலும் சென்று தவஇருக்கையின் நன்மையைப்பற்றி மக்கள் எளிதாகக் கைக்கொள்ளுமாறு விரிவுரையாற்றியும், இருக்கை (ஆசனம்) களைச் செய்துகாட்டியும் விளக்கிவந்தனர். அதனால் அக்கொள்கை எங்கும் பரவுவதாயிற்று. தவஇருக்கையைப் பற்றிய நூலொன்று இவர்களால் வரையப்பெற்று 1953-ல் வெளிவந்துள்ளது. இப்பயிற்சியினை 1934-ல் திரு. இ. எஸ். அரங்கசாமியிடமிருந்து பெற்றனர்.

24-9-1954 வெள்ளிக்கிழமை இரவு 11-மணிக்குத் தம் ஐம்பத்துநான்காம் அகவையில் இறைவன் திருவடிநீழலை எய்தினர். இவர்தம் இழப்பும் தமிழகத்துக்குப் பேரிழப்பேயாம். திருவருளால் இவர்தம் ஆவி என்றும் இன்புறுமாக. இவர்தம் அருமை மனைவியார்க்கும், அருமை மக்கள் ஐவர்க்கும் நம் ஆழ்ந்த பரிவும் ஆறுதலும் உரியவாகுக.

—இதழாசிரியர்.

செய்திகளும் குறிப்புக்களும்

(க) நாமக்கல் கவிஞர் கூற்றுப் பொருந்துமா?

கடந்த 4—9—54-ஆம் நாள் தில்லித்தமிழ்ச் சங்கச் சார்பில் தமிழன்பர்கள் நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கட்குப் பாராட்டு ஒன்று நிகழ்த்திப் பெருமைப் படுத்தினார்கள்.

அப்பாராட்டுக் கூட்டத்தாருக்கு நன்றி கூறுங்கால் தனித்தமிழ் கூடாது என, அவர் கூறியதாவது:

'ஒருமொழி வளருவதற்குப் பிறமொழிப் பதங்களில் தக்கவற்றை ஏற்றால்தான் நல்லது. ஆங்கிலம் தங்குதடையின்றி அன்னிய மொழிகளிலிருந்து எவ்வளவோ பதங்களைத் தனதாக்கிக்கொண்டிருக்கிறது. சமஸ்கிருத மொழியின்பால் துவேசம் கூடாது' என்பது.

குறிப்பு: ஆங்கிலம் வளர்ச்சியில்லாத ஒருமொழி. அதனால் எல்லா மொழிச்சொற்களையும் ஏற்றுக்கொண்டு வளர்ந்தது. தமிழ் இயற்கை மொழி. புதுக்கருத்துக்களையும் புதுச்சொற்களால் ஆக்கும் வன்மை அதற்குண்டு. அதனால் அதற்கு வேற்றுச் சொற்களோ, வேற்று எழுத்துக்களோ வேண்டுமென்பதில்லை. புல்லுருவிகள் இடைக்காலத்தில் தோன்றிக் குப்பை, கூளம், பதர் போன்ற வேற்றுச்சொற்களையும், வேற்றொலி எழுத்துக்களையும் புகுத்தித் தமிழ்மொழிப் பொன்னுடலில் அம்மைத் தழும்பாக்கிக் கெடுத்தனர். தமிழ்மொழியில் வேற்றுச்சொல்லொலி கலக்கும்போது ஓசையின்பமும் யாற்றொழுக்குப்போன்ற இன்னொலியும் கெடுகின்றன. ஸ்ரீ. நன்றாக இருக்கின்றதா? திரு. நன்றாக இருக்கின்றதா? அக்கிராசனாதிபதி, தலைவர் ஆயிற்று. பிரசங்கம், சொற்பொழிவு, விரிவுரை ஆயிற்று. புருஷர், ஸ்திரிகள் ஆண், பெண் ஆயினர். இவைகளுள் எவை மொழியை வளர்க்கும், எவை அதனைக் கெடுக்கும் என்பதைக் கவிஞரே சிறிது ஊன்றி எண்ணுவாராக. வேற்றுமொழி வேட்கை நம் தமிழர்களை-அதிலும் கற்றோரென்று வீறு பேசுவோரை விட்டபாடில்லை. இவ்வாறு பிற்போக்குக்குச் செல்வார்களானால் நாடும், மொழியும், கலையும் எவ்வாறு வளரும்? முன்னேறும்? தமிழ் நன்மக்கள் கவிஞர் கூற்றுப்பொருந்துமா? என்று எண்ணி மொழி வளர்ச்சியில் கருத்து வைப்பார்களாக.

(உ) தமிழ் மன்றம்

தமிழ் மன்றம் என்னும் பெயரால் 18—9—54-ஆம் நாள் இந்திய ஒவர்சீஸ் பாங்கு டைரக்டர் திரு. ஏ. சுப்பையாவின் வீட்டில் நடைபெற்ற கூட்டத்தில் இம்மன்றம் நிறுவப்பெற்றது. இதன் நோக்கம், தமிழின் சிறப்பை உணர்த்தும் நூல்களைச் சீர்கேட்டினின்றும் விலக்குவது; தமிழ்மொழியின் எல்லாத்துறைகளையும் ஆராய்வது; தமிழ்மொழியின் அழகையும் தொன்மையையும் தமிழ் பேசும் மக்கள் யாவரும், வெளிநாட்டு மக்களும் அறியச்செய்வது; நூல்கள், வெளியீடுகள், நாளிதழ் முதலியவைகளை மேலும் வளர ஊக்குவிப்பது; உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள பல்கலைக் கழகங்களோடு தொடர்பும், உறவும் ஏற்படுத்திக்கொள்வது போன்றவை.

இம்மன்றத்திற்கு திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை, கருமுத்து. தியாகராசச்செட்டியார், ஏ. வி. இராமன், ஏ. சுப்பையா, கே. கே. பிள்ளை, டாக்டர் மு வரதராசனார், வி. எஸ். தியாகராசமுதலியார், சி. அமிர்தகணேசமுதலியார் முதலியவர்கள் உறுப்பினர்களாகவும் தலைவர், அமைச்சர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

மதிப்புரை

(க) [திருவள்ளுவர் தமிழ்மாணவர் கழகம், வெள்ளிவிழா மலர், திருவையாறு. பக்கங்கள் 102.]

இம்மலர் திருவையாற்று அரசர் கல்லூரித் திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகத்தாரால் வெளியிடப்பெற்றது. மேல் அட்டையில் திருவள்ளுவர் திருவுருவும், உட்புறத்தில் கல்லூரிக்கட்டிடமும் சரபோசி மன்னர், ஏ. டி. பன்னீர்ச்செல்வம், வி. நாடி முத்துப்பிள்ளை, கல்லூரித்தலைவர், ஆசிரியர் குழு, வெள்ளிவிழாக் கழக உறுப்பினர் களும் படமாக அமைந்து அணி செய்கின்றனர். கட்டுரைகளாக 'சரபோஜி வாழ்க்கை வரலாறு' முதல் 'சொல்லேருழவர்' என்பது ஈறாக அழகிய சொல்லோவிய, கருத்து வன்மை மிக்க கட்டுரைகள் பாக்கள் திகழ்கின்றன. கட்டுரைகளும், பாக்களும் தனித்தமிழில் மிக்க இன்பந்தருவனவாக அமைந்துள்ளன. அண்மையில் அழிவுறுத்திய புயல்பற்றி திரு. முத்துச்சாமி அவர்கள் பாடியுள்ள பாக்கள் புயலின் கொடுமையை விளக்கும் உயிரோவியமாக அமைந்து மெய்ப்பாட்டு உணர்ச்சியை ஊட்டுகின்றன. படித்தற்கேற்ற சுவைத்தற்கினிய இம் மலர் தமிழ்நன்மக்கள் கையகத்தும் நாவகத்தும் செறிந்து நன்மணம் கமழ்வதாக. இவர்களின் அரிய தொண்டினைப் பெரிதும் பாராட்டு கின்றோம்.

(உ) சொந்தத் தொழில்

[பக்கம் 112. விலை ரூ. 1—8—0. ஆசிரியர்: திரு. ஆர். தயாநிதி ஆசிரியர்: 'உலகம்' திருச்சிராப்பள்ளி, கஸ்தூரி பதிப்பகம், உறையூர்]

உலகம் தொழிலாளரை அடிப்படையாகக்கொண்டது; தொழி லாளர் இன்றி உலகம் இயங்காது; சிறவாது; உலகந்தோன்றிய நாள் தொட்டு முதலாளி தொழிலாளி போராட்டம் நீங்கியபாடில்லை. இப் போராட்டத்தை நீக்க எழுந்ததே இந்நூல். இதன்கண் 'என்ன செய்வது?' என்பது முதல், 'வாசனைத்திரவியங்கள்' என்பது ஈறாக உகூ தலைப்புக்களில் ஆசிரியர் விளக்கியுள்ளனர். காலத்துக்கேற்ற அரிய சீரிய நூல் இது. ஆசிரியரின் இப்புது முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றோம். ஆசிரியர், பிறருக்கு அடிமையின்றித் தன்னுரிமை யோடு வாழும் வழியை வற்புறுத்தி 'வேலையும் தொழிலும்' என்ற தலைப்பில் விளக்கியிருப்பது போற்றற்குரியது கைத்தொழில் முறை களையும் அனுபந்தத்தின் கீழ் 'தேனீ வளர்த்தல்' 'மால்ட் ஆகாரங்கள்' முதலிய தலைப்புக்களில் கூறி அவைகளை மேற்கொண்டு நிகழ்த்தும் முறைகளையும் விளக்கிக் கூறியிருப்பது ஆசிரியரின் பரந்துபட்ட பேரறிவுப் பண்பை விளக்குகின்றது. ஆசிரியர் இன்னும் இது போன்ற புதுவழிகளில் பன்னூல்கள் எழுதி நாட்டுக்கும், மக்கட்கும் வேண்டும் நலம் பல செய்து மேன்மை பெற வேண்டுகின்றோம்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.